**இனிது ரகசியம் அல்ல!**

தென்னிலங்கையில் வாரிசு அரசியல் தாராளமாக உண்டு. சேனநாயக்காக்கள், பண்டாரநாயக்காக்கள், ராஜபக்ஷாக்கள் என்று வாரிசு அரசியல் அதிகம் கண்டு விட்டோம்.

தமிழர்கள் மத்தியில் அது குறைவு. தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசன் பக்கம் 02

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 15 ஞாயிற்றுக்கிழமை 30.12.2018 கதிர் 55

# மஹிந்தவின் அராஜகத்தை அடக்கியதால் புதிய அரசமைப்புப் பணிக்குப் புத்துயிர்!



## சுதந்திர தினத்துக்கு முன்னர் வரைவு வெளியாகும் என்கிறார் சுமந்திரன் எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெம்பர் 30

குறுக்கு வழியில் ஆட்சிப்பீடம் ஏறிய மஹிந்த ராஜபக்ஷ அரசின் அடக்குமுறையை - ஒடுக்குமுறையை - அராஜகத்தை நாம் அடக்கியதால் புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகள் புத்துயிர் பெற்றுள்ளன.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். பக்கம் 11

கூட்டமைப்பின் உருவாக்கத்துக்கு முன்

## ஜனநாயக அரசியலுக்கு புலிகள் தடைவிதித்தனர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 30

தமிழ் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கு முன்னர் தமிழ் அரசியல் கட்சிகள் ஜனநாயக அரசியலை முன்னெடுப்பதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தடையாக இருந்தனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் பக்கம் 11

## கூட்டமைப்பில் எவரிடத்திலும் இரட்டைக் குடியுரிமை இல்லை

மஹிந்த தரப்பின் குற்றச்சாட்டை அடியோடு மறுக்கிறார் சுமந்திரன்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவரிடம் இரட்டைக் குடியுரிமை உள்ளதாக மஹிந்த ஆதரவு பக்கம் 11

## ‘ஒற்றையாட்சி’ என்று தமிழிலா ரணில் மகாநாயக்க தேரர்களிடம் பேசினார்?

### தமிழ் ஊடகங்களிடம் சுமந்திரன் கேள்வி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 30

மகாநாயக்க தேரர்களோடு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேசும் போது தமிழிலா பேசினார்? ஒற்றையாட்சி என்று தமிழிலா சொன்னார்?. அவர் ‘ஏக்கிய இராஜ்ஜிய’ என்றுதான் சொல்லியிருப்பார்.

- இவ்வாறு நேற்றுத் தமிழ் ஊடகவியலாளர்களைப் பார்த்துக் கேட்டார் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. பக்கம் 11

## இரணைமடு விசாரணைக் குழுவிலிருந்து விரிவுரையாளர் சிவகுமார் அதிரடி நீக்கம்



யாழ்ப்பாணம், டிசெ. 30

இரணைமடுக் குளம் முகாமைத்துவம் தொடர்பில் விசாரணை செய்யும் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீட விரிவுரையாளர் சுப் பக்கம் 02

## ஆளியவளை கடற்கரையில் ஒதுங்கிய மர்மப் பொருள்!



யாழ்ப்பாணம், டிசெ. 30

வடமாராட்சி கிழக்கு ஆளியவளைக் கடற்கரையில் நேற்று அதிகாலை மர்ம பொருள் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. பக்கம் 02

## வடக்கு சுகாதார சேவைகள் விரைவில் சீர் செய்யப்படும்

கிளிநொச்சியில் அமைச்சர் ராஜித



கிளிநொச்சி, டிசெ. 30

பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதியாக வடபகுதி காணப்படுகின்றது. தற்போது ஏற்பட் பக்கம் 02

## வடக்கு மக்களுக்கு உதவ வருகிறது நல்லிணக்க ரயில்

கொழும்பு, டிசெ. 30

வடக்கில் இடம்பெற்ற வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஜனவரி முதலாம் திகதி விசேட ரயில் ஒன்று ‘நல்லிணக்க ரயில்’ என்ற பெயரில் நிவாரணப் பொருள்களை எடுத்துக்கொண்டு பக்கம் 02

## ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப்படுவார் சஜித்

ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கி பலருக்குப் பலவிடயங்களைத் தெளிவுபடுத்துவோம் என அமைச்சர் சுஜீவ சேனசிங்க பக்கம் 11

## பிரதேச சபை உறுப்பினர் துப்பாக்கியுடன் கைது!

கொழும்பு, டிசெ. 30

துப்பாக்கியைத் தன்வசம் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட பக்கம் 02

## நாடாளுமன்றத் தேர்தலை துணிவிருந்தால் நடத்துங்கள்

ரணிலுக்கு மஹிந்த சவால்



கொழும்பு, டிசெ. 30

தோல்வியை எதிர்நோக்க இயலாமை காரணமாகச் சிலர் நாடாளுமன்றத் தேர்தலுக்கு எதிராகச் செயற்படுகின்றனர். பக்கம் 02

## மேற்கு நாடுகள் மீண்டும் இலங்கை மீது கைவரிசை

சாடுகின்றது மஹிந்த தரப்பு

கொழும்பு, டிசெ. 30

மேற்கத்தேய நாடுகள் மீண்டும் தங்கள் கைவரிசையைக் காண்பிக்க ஆரம்பித்துள்ளன என மஹிந்த தரப்பு பக்கம் 11

## வெள்ள வாய்க்காலில் விழுந்து 12 வயதுச் சிறுவன் உயிரிழப்பு!

கிளிநொச்சியில் துயரச் சம்பவம்



கிளிநொச்சி, டிசெ. 30

விளையாடிக்கொண்டிருந்த 12 வயதுச் சிறுவன் வெள்ளம் நிரம்பிய வாய்க்காலில் விழுந்து உயிரிழந்தான்.

இந்தச் சம்பவம் நேற்றுக் கிளிநொச்சியில் பக்கம் 11

# விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு மொறிசியஸ் நாட்டில் நினைவுத் தூபி

கொழும்பு, டிசெ. 30

மொறிசியஸ் அரசு, தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு புலம்பெயர் சமூகத்துக்கு நிதி உதவி வழங்கி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்தில் அமைந்துள்ள மொறிசியஸ் தூதரகத்தின் ஊடாக இவ்வாறு புலி ஆதரவு தரப்பிற்கு மொறிசியஸ் அரசு நிதி உதவி வழங்கி வருவதாகச் சிங்கள ஊடகமொன்று குற்றம் சுமத்தியுள்ளது.

உயிரிழந்த விடுதலைப் புலி தலைவர்களை நினைவு கூர்வதற்காக நினைவுத் தூபி ஒன்றை அமைப்பதற்கு மொறிசியஸ் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.சுவிட்சர்லாந்துக்கான மொரிஷியஸ்தூதுவருக்கும், புலம்பெயர் விடுதலைப் புலித் தலைவர் ஒருவருக்கும் இடையில் மனித உரிமைப் பேரவையில் சந்திப்பு நடத்தப்பட்டமை தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடுதலைப் புலித் தலைவர் பற்றிய விவரங்கள் புலனாய்வுப் பிரிவினருக்கும் கிடைக்கப் பெற்றுள்ளன எனச் சிங்கள பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ரயில் விபத்தில் சிக்கினார் இலங்கை கிரிக்கெட் வீரர்

கல்கிஸையில் ஏற்பட்ட ரயில் விபத்தில் 19வயதிற்குட்பட்ட இலங்கை தேசிய கிரிக்கெட் அணி வீரர் படுகாயமடைந்துள்ளார்.

அக்ஷு பெர்ணான்டோ என்ற வீரர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் கொழும்பு தூய தோமையார் கல்லூரியில் 19 வயதிற்குட்பட்ட இலங்கை கிரிக்கெட் அணியில் விளையாடியுள்ளார்.

இலங்கைஏ அணியைப்பிரதிநிதித்துவப்படுத்தும் திறமையான வீரர்களில் ஒருவராகத் தெரிவாகிய அவர், ராகம கிரிக்கெட் கழகத்தில் விளையாடி வருகின்றார். கல்கிஸை கடற்கரைக்கு அருகில் இடம்பெற்ற பயிற்சிகள் நிறைவடைந்து வீடு நோக்கிச் செல்லும்போது அவர் விபத்திற்கு முகம் கொடுத்துள்ளார்.

இந்த விபத்தில் அவரது உடம்பில் பலத்த காயமேற்கொள்ளப்பட்ட போதிலும் மூளைக்குப் பெரிய பாதிப்புகள் இல்லை என வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

எதிர்கால இலங்கை அணிக்கான நம்பிக்கை நட்சத்திரமாக அவர் கருதப்படுகிறார் எனச் சக வீரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.(ஐ)

## மன அழுத்தத்தைப் போக்கவே தாய்லாந்து சென்றார் மைத்திரி

கொழும்பு, டிசெ. 30

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனிப்பட்ட பயணமாக தாய்லாந்திற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். கடந்த சில நாட்களுக்கு முன்னர் தனது குடும்பத்துடன் ஜனாதிபதி தனது பயணத்தை மேற்கொண்டார்.

இந்நிலையில் தாய்லாந்தின் வெஹேர விகாரைக்குக் குடும்பத்துடன் சென்ற ஜனாதிபதி அங்கு மத வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார். தாய்லாந்திலுள்ள அனைத்து பௌத்த விகாரைகளுக்கும் சென்று மத வழிபாடுகளில் ஈடுபட ஜனாதிபதி எதிர்பார்த்துள்ளார்.

நாட்டில் அரசியல் குழப்பம் தணிந்த நிலையில், அவசரமாக ஜனாதிபதி தாய்லாந்து சென்றிருந்தார். கடுமையான மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மைத்திரி, ஆன்மீக ரீதியாக வழமைக்குத் திருப்ப எதிர்பார்த்துள்ளார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். அதற்கமைய ஜனாதிபதி மகிழ்ச்சியுடன்தனது பொழுதுகளை தாய்லாந்தில் செலவிட்டு வரும் புகைப்படங்கள் சில இணையத்தில் வெளியாகியுள்ளன. (ஐ)

## மஹிந்தவின் இளைய மகன் ஜனவரி 24 இல் திருமணம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இளைய புதல்வர் ரோஹித சந்தன ராஜபக்ஷ, தனது காதலியான ரற்றியானாவை எதிர்வரும் ஜனவரி 24ஆம் திகதி திருமணம் செய்து கொள்கிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது. தங்காலை, ரன்ன ஹோட்டலில் இந்தத் திருமண நிகழ்வு நடைபெறவுள்ளது.

வீரகெட்டிய கால்டன் இல்லத்துக்கு வரும் விருந்தினர்களை ஹோட்டலுக்கு அழைத்து செல்ல விசேட போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக திருமண அழைப்பிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரோஹித மற்றும் ரற்றியானா ஆகியோர் திருமண நிகழ்வொன்றில் கலந்து கொண்ட புகைப்படம் ஒன்று இரண்டு வாரங்களுக்கு முன்னர் ரோஹிதவின் முகநூலில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தது.(ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியலில் இருந்தாராயினும் தந்தையின் பெயரால் அவருக்கு முன்னுக்கு வரமுடியவில்லை.

தேசியத் தலைவர் பிரபாகரனின் மகன் கூட ஆயுதப் போராளியாகத்தான் களத்தில் இறக்கப்பட்டார்.

தளபதி அமிர்தலிங்கத்தின் மகனோ, ஐயா சம்பந்தனின் மகனோ தந்தையரின் பெயரால் முன்னுக்குத் தள்ளப்படவில்லை.

ஆனால் 'மாவை ஒரு சரித்திரம்' என்று புதிய சுதந்திரன் இதழினால் புகழப்படும் மாவை சேனாதிராசா, தமது வரலாற்றுச் சரிதத்தைப் பதிவதற்காகத் தமது வாரிசு அரசியலைக் கனகச்சிதமாக முன்னெடுக்கின்றார்.

யுத்த காலத்தில் வெளிநாட்டில் கல்வியை முடித்த அவரது மகன் வலி. வடக்கில் – தந்தையின் தொகுதியில் – முதலில் களமிறக்கப்பட்டார். இப்போது அவர் உள்ளூராட்சி சபை உறுப்பினர்.

அவரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞரணித் தலைவர் ஆக்குவதுதான் அடுத்த கட்ட நகர்வு என்று இப்பத்தியில் சில மாதங்களுக்கு முன் குறிப்பிட்டிருந்தேன். அதற்குக் கட்டியம் கூறும் விதத்தில் நேற்று யாழ். மாவட்ட இளைஞரணியின் செயலாளராக ஏகமனதாக அவரைத் தெரிவு செய்யும் கைங்கரியத்தை, மாவையின் அல்லக்கைகளான 'கனகசபாபதி குறூப்' ஒப்பேற்றியிருக்கின்றது.

மாவையைச் சமாளித்து, தன் கைகளில் வைத்திருந்தால் எதிர்காலத்தில் தமக்குக் கட்சிக்குள் அரசியல் அநாதரவு நிலை வந்து விடாது என்ற நம்பிக்கையில், இளைஞரணி விடயத்தில் மாவையின் மகனைத் தூக்கிப் பிடித்துத் திரிந்த எம்.பி ஒருவர்தான் பாவம்.

அவர் முன்னுக்குக் கொண்டு வரத் துடியாய்த் துடிக்கும் அவரின் அல்லக்கை ஒருவரை நேற்றைய தெரிவில் 'கனகசபாபதி அணி' திட்டமிட்டு வெட்டிவிட்டதாம் என்று அவர் கறுவிக் கொண்டிருக்கின்றார் எனக் கேள்வி.

நேற்றுக்காலை இளைஞரணித் தெரிவில் தனது ஆளைக் காலை வாரிவிட்டார்கள் என்ற அதிருப்தியில் முகம் கறுக்க இடையில் புறப்பட்ட எம்.பி, மாலையில் நடைபெற்ற கட்சியின் யாழ். மாவட்டக் கிளைக் கூட்டத்திலும் மிஸ்ஸிங். காலை அதிருப்தி காரணமோ என்னவோ....!

- மின்னல் -

### பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்தால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கந்தானைப் பிரேத சபை உறுப்பினர் உள்ளிட்ட மூவரே இவ்வாறு துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கட்டான பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(ஐ)

### இரணைமடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரமணியம் சிவகுமார் அந்தக் குழுவிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரால் இந்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைகழக பொறியியல் பீட விரிவுரையாளர் சுப்பிரமணியம் சிவகுமார் தலைமையில் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர்(பொறியியல்) எஸ். சண்முகநாதன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் ஆகியோர் அடங்கிய குழுவையே ஆளுநர் நியமித்தார்.

கடந்த 21 ஆம் திகதி பெய்த கடும் மழையின்போது இரணைமடுக் குளத்தின் நீர் கொள்ளளவு சடுதியாக உயர்ந்தபோதும் குளத்தின் வான்கதவுகள் உரிய நேரத்தில் திறக்கப்படாது விட்டதால் வெள்ளப் பாதிப்புக்கள் ஏற்பட்டது எனத் தெரிவித்து அதற்கான விசாரணைகளை முன்னெடுக்கவே இந்த விசாரணைகுழுவை அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### வடக்கு சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள வெள்ளப்பெருக்கு இயற்கை அனர்த்தமும் இம்மக்களைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது. இந்த மக்களின் வாழ்வியலைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை எமது அரசு மேற்கொள்ளும். இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி உதவிகளை வழங்குவதற்காகவே நாம் இங்கு வந்துள்ளோம். வட பகுதி மக்களுக்கான சுகாதார சேவைகளைச் சீர்செய்து மக்கள் உரிய சுகாதார சேவைகளைப் பெறுவதற்குரிய வசதிகள் செய்யப்படும் எனக் கிளிநொச்சியில் வைத்து தெரிவித்தார் சுகாதர அமைச்சர் ராஜித சேனாரத்ன.

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு நேற்று விஜயம் செய்திருந்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்று பார்வையிட்டார்.

தொடர்ந்து பிற்பகல் 3.00 மணியளவில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்ற சுகாதார சேவைகள் தொடர்பான கூட்டத்திலும் கலந்துகொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், வைத்திய அதிகாரிகள், மாவட்ட செயலாளர்கள், துறைசார் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட சுகாதார, வைத்திய அதிகாரிகள் வடக்கு மாகாணத்தின் சுகாதாரச் சேவைகளின் வளப் பற்றாக்குறை தொடர்பிலும், சுகாதார சேவை முன்னெடுப்புக்கள் தொடர்பிலும், தற்போது ஏற்பட்ட வெள்ள அனர்த்தப் பாதிப்பின் பின்னர் அவசர சுகாதார சேவைகள் முன்னெடுக்கப்படும் முறை தொடர்பிலும் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், சுகாதார சேவைகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் மக்களுக்குரிய சுகாதார சேவைகளை உரிய வகையில் வழங்க வைத்தியர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட பல வளப் பற்றாக்குறைகள் காணப்படுகின்றன எனவும், அவற்றை விரைந்து நிவர்த்தி செய்யுமாறும் சுகாதார அமைச்சரிடம் தனது கருத்துக்களை முன்வைத்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேசத்திலுள்ள முழங்காவில் பகுதியில் பெருமளவு மக்கள் வசிக்கின்ற போதிலும் அங்குள்ள முழங்காவில் வைத்தியசாலைக்கு வைத்திய ஆளணியினர் உள்ளிட்ட வளப் பற்றாக்குறை தொடர்ந்தும் காணப்படுகின்றது. அதனால் அங்குள்ள நோயாளர்கள் அவதிப்படுகின்றார்கள். அதனையும் கருத்திற்கொண்டு சீர்செய்ய உரிய நடவடிக்கை எடுங்கள்.

அதேபோல பூநகரிப் பிரதேச வைத்தியசாலை, தருமபுரம் பிரதேச வைத்தியசாலை, மாங்குளம் பிரதேச வைத்தியசாலை, அக்கராயன் பிரதேச வைத்தியசாலை, வட்டக்கச்சி பிரதேச வைத்தியசாலை, பளைப் பிரதேச வைத்தியசாலை போன்றவற்றிலும் மற்றும் யாழ். மாவட்டத்தில் தீவகப் பகுதிகளில் காணப்படும் பிரதேச வைத்தியசாலைகளிலும் வைத்திய ஆளணியினர் உள்ளிட்ட பல்வேறுபட்ட வளப் பற்றாக்குறைகள் காணப்படுகின்றன. அவற்றினையும் கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுத்து உதவவேண்டும்.

விபத்துக்கள் அதிகளவில் இடம்பெறும் பகுதியாக கிளிநொச்சி மாவட்டம் காணப்படுகின்றது. அதனைக் கருத்திற்கொண்டு கிளிநொச்சி மாவட்டத்திற்கு உடனடியாக தனியான விபத்துப் பிரிவொன்றை உருவாக்கச் சுகாதார அமைச்சர் முன்வந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றார்.

இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட சுகாதார அமைச்சர் ராஜித, அதனைக் கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் நடாளுமன்ற உறுப்பினர்களான வைத்திய கலாநிதி சிவமோகன், சி.சிறீதரன், சாந்தி சிறீஸ்கந்தராசா, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம், வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் மற்றும் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரிகள், துறைசார் வைத்தியர்கள், சுகாதாரசேவை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.(ஐ)

### ஆளியவளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பொருள் தொடர்பில் கடற்படையினர் தற்போது ஆய்வுகளை செய்து வருகின்றனர். மக்களும் கூட்டம் கூட்டமாகச் சென்று அதனைப் பார்வையிட்டு வருகின்றனர்.

அது உடைந்த கப்பல் ஒன்றின் பாகமாக இருக்கக்கூடும் என மீனவர்கள் கூறினர். (ஐ-07)

### வடக்கு மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவுள்ளது.

இதற்கு உதவி செய்ய விரும்புபவர்கள் கீழ் குறிப்பிட்ட ரயில் நிலையங்களுக்கு நிவாரணப் பொருள்களை இன்றும் நாளையும் கொடுத்து உதவலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

மருதானை, ராகம, கம்பஹா, மீரிகம, பொல்காவல, குருநாகல், கனேவத்தை, மாகோ, கல்கமுவ, அநுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய ரயில் நிலையங்களில் இந்த உதவிப் பொருட்கள் மக்களிடமிருந்து பெறப்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து யாழ்தேவி ரயிலில் பொருள்கள் முதலாம் திகதி காலை 9.35 மணிக்கு கிளிநொச்சிக்குப் பயணமாகவுள்ளது.(ஐ)

### நாடாளுமன்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றுக்காலை ஹங்கம பிரதேசத்தில் மத வழிபாட்டுக்குச் சென்ற மஹிந்த ராஜபக்ஷ எம்.பி., அங்கு மேலும் கூறியதாவது:–

நாட்டில் மீன்பிடித்துறை உள்ளிட்ட அனைத்துப் வியாபாரங்களும் வீழ்ச்சியடைந்து இருக்கும் அதேவேளையில் கொலைகள் மற்றும் பாதாளக் கோஷ்டிகளின் நடமாட்டம் கூடுதலாக உள்ளது.

இந்த அரசு, ஜனாதிபதித் தேர்தலை நடத்துமா அல்லது மாகாண சபைத் தேர்தலை நடத்துமா என்று சொல்லத் தெரியாது.

ஆனால், நாம் நாடாளுமன்றத் தேர்தலைத்தான் விரும்புகின்றோம். தேர்தலை எதிர்நோக்கப் பயந்திருக்கும் சிலர் அதற்கு எதிராகச் செயற்படுகின்றனர்.

துணிவிருந்தால் பொதுத் தேர்தலை நடத்திக் காட்டுமாறு அவர்களுக்கு (ரணில் அரசு) நாம் சவால் விடுகின்றோம் – என்றார்.(ஐ)

சிலை உடைப்பு விவகாரம்:

## கைதான 7 பேரிடமிருந்தும் புதிய தகவல்கள் அம்பலம்

கொழும்பு, டிசெ. 30

மாவனல்லை உட்பட அண்டிய சில பகுதிகளில் இடம்பெற்ற புத்தர் சிலை உடைப்புச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் ஏழு பேரிடம் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

இந்தச் சந்தேகநபர்கள் அடிப்படைவாதக் குழுவொன்றின் உறுப்பினர் எனவும், இவர்கள் வேறு மதத் தலங்களுக்கும் சேதம் விளைவித்துள்ளதாகவும் விசாரணைகளின்போது இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று மாவனல்லைப் பிரதேசத்துக்குச் சென்றுள்ளதாகக் கூறப்பட்டது. (ஐ)

# வெளியிடப்பட்டது விசேட வர்த்தமானி

## முக்கிய நிறுவனங்களை தன் கைக்குள் வைத்து ரணில் அரசுக்கு அதிர்ச்சி கொடுத்த மைத்திரி

கொழும்பு, டிசெ. 30

**புதிய அமைச்சரவையின் அமைச்சர்களின் பணிகள், அவர்களுக்கான திணைக்களங்களை உறுதி செய்யும் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைய, 2103 / 33 என்ற இலக்கத்தின் கீழ் வர்த்தமானி வெளியாகியுள்ளது.**

அதில் ஊடகத்துறை சார்ந்த முக்கிய நிறுவனங்களை ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளார்.

ஜனாதிபதியினால் பாதுகாப்பு அமைச்சு உட்பட 21 நிறுவனங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அரச அச்சகத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், தேசிய ஊடக மத்திய நிலையம், தேசிய மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை ஆகியவைகள் அதற்குள் உள்ளடங்குகின்றன.

ஜனாதிபதியின் கீழ் செயற்படும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சுகளுடன் 21 நிறுவனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் நிர்வகிக்கப்படும் தேசிய கொள்கை, பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில்சார் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சுடன் 24 நிறுவனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இலங்கை பத்திரங்கள் மற்றும்பரிவர்த்தனை ஆணைக்குழு, தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை, இலங்கையின் ஊடக மற்றும் தகவல் தொடர்பாடல் திணைக்களம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி சேவை, லங்கா ஐக்கிய செய்திகள் மற்றும் இலங்கை பொது உட்கட்டமைப்பு ஆணைக்குழு ஆகியவைகள் நிதி மற்றும் ஊடக அமைச்சின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றின் அமைச்சராக மங்கள சமரவீர செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புத்தர் சிலை உடைப்பின் பின்னால் அரசியல் சதி!

### விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 30

புத்தர் சிலை உடைக்கப்பட்ட சம்பவங்களின் பின்னணியில் அரசியல் சதி இருக்கலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ஸ சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

கடந்த காலங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தற்போது இனக்கலவரம் ஒன்று தேவைப்படுகின்றது. அரசு இனக்கலவரத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் பங்காளிகளாகச் செயற்படுகின்றன. இவ்வாறான நிலையில், பொது மக்கள் யாரும் சட்டத்தைக் கையில் எடுக்க வேண்டாம் எனக் கோருகின்றேன். புத்தர் சிலை உடைக்கப்பட்ட சம்பவங்களின் பின்னணியில் அரசியல் சதி இருக்கலாம். கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது ஏற்பட்ட தோல்வியை மறைக்க அம்பாறையிலும், கண்டியிலும் இனப்பிரச்சினையை ஏற்படுத்தியிருந்தனர். இதனைப் பின்னர் அறிந்து கொள்ள முடிந்தது.

இந்நிலையில், அரசு தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை மூடிமறைக்க இவ்வாறு புத்தர் சிலைகளை உடைத்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது–என்றார். (ஐ)

## 20ஆவது திருத்தத்தை விரும்பாத மைத்திரி

கொழும்பு, டிசெ. 30

20ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேல் மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார இதனை ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒழிக்க வேண்டும் என்ற யோசனை எதற்காகக் கொண்டு வரப்பட்டது என்று யாருக்கும் தெரியாது.

இதற்குப் பின்னால் பல இரகசியங்கள் உள்ளன. அரசசார்பற்ற அமைப்புக்களும் இந்தச் சூழ்ச்சியில் பங்கேற்றுள்ளன. ஜே.வி.பியை பொறுத்தவரை, அது இன்று பலவீனமான கட்சியாக இருக்கிறது. எனவே இந்தப் பலவீனமான கட்சி கொண்டு வந்துள்ள யோசனையை கிராம மட்டத்தில் உள்ள மக்களும் நிராகரிக்கின்றனர். ஜனாதிபதியும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை–என்றார். (ஐ)


## பொருளாதார நிலை குறித்து அறிக்கை கோருகிறார் ரணில்

கொழும்பு, டிசெ. 30

மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் மற்றும் நிதி அமைச்சராகச் செயற்பட்ட காலப் பகுதியில் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட அழுத்தம் தொடர்பில் அறிக்கை ஒன்றை வழங்குமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் அனைத்துப் பிரிவுகளுக்கு பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதற்கமைய நிதி அமைச்சு உட்பட பொருளாதாரத்துடன் தொடர்புடைய அனைத்து அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களில் புதிதாக தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனவரி மாதம் இரண்டாம் திகதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.



இந்த அறிக்கையை ஒப்படைத்த பின்னர் நாட்டின் பொருளாதாரத்துக்கு மேற்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பில் பிரதமரினால் தீர்மானிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஐ)

## அரசுக்கு எதிராக திரைமறைவில் சதி

### கூறுகிறார் மனு நாணயக்கார

கொழும்பு, டிசெ. 30

சட்ட ரீதியாக அமைக்கப்பட்ட அரசுக்குக் கடந்த ஒக்டோபர் 26 ஆம் திகதி சதி செய்தவர்களினால் முட்டுக்கட்டைகள் இடப்படுவதாகவும், இந்தத் தடைகள் அரசுக்கு எதிரானவை அல்ல, மக்களின் வாழ்வாதாரத்துக்கு எதிரானவையே எனவும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

காலி, திக்கும்புர, மலல்கொட பிரதேசத்திலுள்ள ஆரம்பப் பாடசாலையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–



வழங்கப்பட்ட அமைச்சுக்களுக்குரிய விடயதானங்களை வர்த்தமானியில் வெளியிட முடியாமல் அரசுக்கு இடைஞ்சல் செய்கின்றனர். அமைச்சுக்களின் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் காலில் பிடித்து இழுக்கின்றனர்.

அரசைப் பலவந்தமாகக் கைப்பற்றியவர்கள் பொது மக்களின் எதிர்ப்புக்கும் நீதிமன்றத் தீர்ப்புக்கும் மத்தியில் அதனை கையளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டனர். பின்னர், அரசைக் கையளித்த போதிலும் அரசு முன் நகர முடியாமல் முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர்.

இதனால் பாதிக்கப்படுவது இந்த நாட்டின் பொது மக்களே–என்றார். (ஐ)

## பெப்ரவரி 4 ஆம் திகதி ஞானசாரர் விடுதலை

### சிங்கள ராவய கூறுகின்றது

கொழும்பு, டிசெ. 30

சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் எதிர் வரும் பெப்ரவரியில் விடுதலை செய்யப்படுவார் என நம்புவதாகச் சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்தார்.

சுதந்திர தினக் கைதிகள் விடுதலையின்போது ஞானசார தேரருக்கும் விடுதலை வழங்கப்படவுள்ளதாகவும் தேரர் குறிப்பிட்டார்.

ஞானசார தேரரின் தாய் தனிப்பட்ட முறையில் தேரரின் விடுதலை குறித்து ஜனாதிபதிக்குக் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன், மகா சங்கத்தினரும் ஜனாதிபதியிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி இந்தக் கோரிக்கைகளைப் புறந்தள்ளமாட்டார் என்ற நம்பிக்கை தம்மிடம் உள்ளதாகவும் சுதந்த தேரர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ‘ஏக்கிய இராச்சிய’ விடயத்தில் ஊடகங்கள் மீதான குற்றச்சாட்டு

‘செல்லும் செல்லாதவை எல்லாம் செட்டியார் தலையில்’ – என்பார்கள்.

இங்கு அரசியல்வாதிகள் தங்கள் சிங்கல்களைத் தீர்க்கும் செட்டியார்களாக விடயங்களைத் தூக்கிப் பத்திரிகையாளர்கள் மீது போட்டுவிடும் பண்பு தராளமாக நடக்கின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் சம்பந்தமான விவகாரத்தில் நாட்டின் சுபாவம் பற்றிய விடயத்தில் ஒரு சர்ச்சை நீடிக்கின்றது. *‘ஏக்கிய இராச்சிய’* என்ற சிங்களச் சொற்றொடர்தான் அந்தச் சர்ச்சைக்குரிய விடயமாகும்.

இந்த *‘ஏக்கிய இராச்சிய’* என்ற சொல் 1972 குடியரசு அரசமைப்புக்குப் பிற்பட்ட காலத்தில் சிங்களத்தில் ‘ஒற்றையாட்சி’ என்ற கருத்தை அர்த்தப்படுத்துவதாக விளங்கி வந்தாலும், அது ‘ஒருமித்த நாடு’ என்ற பதத்தையும் விளக்கி நிற்பதாகக் கூறப்படுகின்றது.

இப்படி இரட்டை அர்த்தம் தரும் சொல்லைச் சிங்களத்தில் பயன்படுத்துவதன் மூலமாக தமிழருக்கு ‘ஒருமித்த நாடு’ என்றும், சிங்களவருக்கு ‘ஒற்றையாட்சி’ என்றும் இரட்டை அர்தத்தைக் கொடுத்து விடயத்தை மூடி மறைத்து நகர்த்த ரணில் – சுமந்திரன் குழு முயலுவதாகக் குற்றச்சாட்டு.

ஆனாலும், அப்படி விளக்கம் – வியாக்கியானம் – வரக்கூடாது என்பதற்காக அங்கு *‘ஏக்கிய இராச்சிய’* எனப் பயன்படுத்தும் சொல் ‘ஒருமித்த நாடு’ என்பதையே குறிக்கும் என்ற அகராதி விளக்கத்தையும் அந்த அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு அடிக்குறிப்பாக மூன்று மொழிகளிலும் அப்படியே சேர்த்துக் கொள்வது என்பதுவும் –

ஆகவே, புதிய – உத்தேச – அரசமைப்பில் *‘ஏக்கிய இராச்சிய’* என்ற சொல் ஒருமித்த நாடு என்பதையே திட்டவட்டமாகக் குறிக்கும் என்பதுவும் –

ரணில் – சுமந்திரன் தரப்பு தரும் விளக்கம். ஒரு வகையில் அது ஏற்புடையதே. அந்தக் கருத்தைச் சவாலுக்கு உட்படுத்தும் எண்ணம் ஏதும் எமக்கு இல்லை. ஒரு சொல்லுக்கு என்ன அர்த்தம், அந்தச் சொல் என்ன விடயத்தைக் குறித்து அங்கு பிரஸ்தாபிக்கப்படுகின்றது என்பது அதிலேயே திட்டவட்டமாகவும் தெளிவாகவும் இடம்பெற்ற பின்னர், அதை சவாலுக்கு உட்படுத்துவதில் எமக்கு உடன்பாடு இல்லை.

ஆனால், அந்த அரசமைப்பு ஏற்பாட்டுக்கு வெளியில் இன்றும் *‘ஏக்கிய இராச்சிய’* என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுகின்றபோது அது ‘ஒருமித்த நாடு’ என்பதை மட்டுமே குறிக்கும், ‘ஒற்றையாட்சி’ என்பதை அல்ல என்று சுமந்திரன் அடித்துக் கூறுகின்றமையைத் தான் எம்மால் ஏற்க முடியாது உள்ளது.

நேற்று முன்தினம் கண்டியில் மகா நாயக்கர்களைச் சந்தித்து ஆசி பெற்ற பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். சிங்களத்தில்தான் ஊடகவியலாளர்களிடம் பேசினார்.

*“அரசமைப்பில் பௌதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றியமைக்கப்படமாட்டாது”* – என்று மிக உறுதியாகக் கூறிய பிரதமர், பின்னர் நாட்டின் ஆட்சி முறைமை குறித்தும் பிரஸ்தாபித்தார். ஊடகவியலாளரிகள் திரும்பத் திரும்ப நோண்டிக் கேட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

*“தற்போதுள்ள ‘ஏக்கிய இராச்சிய’ முறைமை பாதுகாத்து முன்னெடுக்கப்படும். அது தொடரும்”* – என்று தெளிவாகவும் அறுத்து உறுத்தும் பிரதமர் சிங்களத்தில் கூறியிருக்கின்றார் என்பதை எமது செய்தியாளர்கள் கண்டியிலிருந்து பதிவு செய்து எமக்கு அறிவிக்கின்றனர்.

*‘ஏக்கிய இராச்சிய’* என்ற சிங்கள சொல்லுக்கு இரண்டு அர்த்தம் இருப்பது எங்களுக்கு தெரியும். அதை ஏற்கனவே நாம் இப்பத்தியில் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

ஆனால், நேற்று முன்தினம் கண்டியில் பிரதமர் ஊடகங்களுக்குத் தகவல் வெளியிட்டபோது குறிப்பிட்ட *‘ஏக்கிய இராச்சிய’* என்ற சிங்களச் சொல்லின் அர்த்தம் ‘ஒற்றையாட்சி’ என்பது மிகத் தெளிவானது, வெளிப்படையானது. ஏனென்றால் தற்போதுள்ள *‘ஏக்கிய இராச்சிய’* முறைமை பாதுகாக்கப்படும் என்றே அவர் கூறினார். தற்போது நடைமுறையில் இருப்பது ‘ஒற்றையாட்சி’. அது ‘ஒருமித்த நாடு’ என்ற ஆட்சி முறைமை அல்ல.

எனவே கண்டியில் வைத்துப் பொதுமக்களுக்கு பிரதமர் குறிப்பிட்ட *‘ஏக்கிய இராச்சிய’* ஒற்றையாட்சிதான். அதனால்தான் அப்படி *‘பௌத்தத்துக்கே முன்னுரிமை, ஒற்றையாட்சியும் நீடிக்கும்!’* – என்று நாம் நேற்று எமது முன்பக்கச் செய்தியில் பிரதமரின் கூற்றுக்குத் தலைப்பிட்டோம்.

நேற்றுச் செய்தியாளர் மாநாட்டைக் கூட்டிய சுமந்திரன் *“பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒற்றையாட்சி என்று தமிழில் கூறினாரா என நான் ஊடகங்களைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன். அவர் ‘ஏக்கிய இராச்சிய’ என்றுதான் சொல்லியிருப்பார். அதை ஏன் ‘ஒற்றையாட்சியுடன்’ போட்டுக் குழப்புகின்றீர்கள்?”* – என்று ஊடகங்களை வைதிருக்கின்றார்.

சுமந்திரன் அவர்களே! பிரதமர் ரணில் கண்டியில் கூறியது *“ஏக்கிய இராச்சிய தொடரும்”* என்பதுதான். ஆனால் அந்த *‘ஏக்கிய இராச்சிய’* என்பது இருக்கின்ற விடயம் ஒன்று மாற்றமின்றித் தொடர்வது பற்றிய கூற்று. ஆகவே அது ஒற்றையாட்சிதான்!

உங்கள் பிரதமர் தென்னிலங்கை மக்களைச் சமாளிப்பதற்குக் கூறும் கருத்தை நாம் அப்படியே வடக்குத் தமிழ் மக்களுக்கும் எடுத்துரைத்தால் அது உங்கள் தீர்வு முயற்சிக்குப் பாதிப்புத் தருவதாக அமையக் கூடும்.

அதற்காக நாம் பிரதமர் கூறாதவற்றை வலிந்து கூறுகின்றோம் என்ற அபவாதத்தை எங்கள் மீது நீங்கள் சுமத்துவது தவாறாகும்.

# மக்களைக் கொன்று குவித்த ராணுவமே இன்று கொடைகளையும் வழங்குகிறது

## கிளிநொச்சியில் விக்னேஸ்வரன் சாடல்




எமது மக்களைக் கொன்று குவித்த இராணுவமே இன்று கொடைகளையும் கொடுக்க முன்வந்துள்ளது. தாம் மனிதாபிமான நிறுவனமாக மாறியுள்ளார்கள் என்று ஜெனிவாவில் காட்ட வேண்டிய ஒரு கடப்பாடு அவர்களுக்கு இருக்கலாம். அதற்கு எமது மக்களை அவர்கள் பாவிக்கலாம். ஆனால் அதற்காக எமது மக்கள் எமது மக்கள் அல்லர் என்று ஆகிவிடாது

இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மக்கள் நலக் காப்பகத்தில் வைத்து வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் உதவிப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன. அதில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரச அனுகூலங்களைப் பெறும் காப்பகத்தில் நீங்கள் எவ்வாறு உங்கள் கொடைகளைச் செய்யலாம் என்று என்னிடம் கேள்வி கேட்கப்பட்டது. நாங்கள் செய்வது மனிதாபிமான சேவை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:

அண்மைய வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ் மக்கள் கூட்டணி எம்மால் இயன்ற அளவு மனிதாபிமான முறையில் கிளிநொச்சி மாவட்டத்தில் வைத்து 2ம் கட்டமாக இந்த நிவாரணப் பணியைச் செய்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த 100 பேரைத் தெரிவு செய்து இவ்வுதவிகளை வழங்க முன்வந்துள்ளோம். எம் ஆதரவாளர்கள் மனமுவந்து தந்துள்ள நிதியை வைத்தே நாங்கள் இந்த உதவிகளைச் செய்து வருகின்றோம்.

கொடையாளிகளின் ஆதரவுகள் அனைத்தும் எம் பாதிக்கப்பட்ட மக்களிடம் போய்ச்சேர வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். கட்சி, இன பேதத்தினைக் கடந்து மனிதாபிமான முறையில்தான் இவ்வுதவிகளைச் செய்து வருகின்றோம்.

படையினர் தொடர்ந்தும் இங்கிருந்தால் எமது மக்களின் வறுமையைப் பாவித்துத் தமக்குச் சாதகமாக ஒரு சூழலை ஏற்படுத்தக் கூடும் என்பதால்தான் நான் இராணுவத்தினரை முற்றாக வெளியேற வேண்டும் என்று கோரி வந்துள்ளேன். கொன்று குவித்த இராணுவமே இன்று கொடைகளையும் கொடுக்க முன்வந்துள்ளது.

தாம் மனிதாபிமான நிறுவனமாக மாறியுள்ளார்கள் என்று ஜெனிவாவில் காட்ட வேண்டிய ஒரு கடப்பாடு அவர்களுக்கு இருக்கலாம். அதற்கு எமது மக்களை அவர்கள் பாவிக்கலாம். ஆனால் அதற்காக எமது மக்கள் எமது மக்கள் அல்லர் என்று ஆகி விடாது. அரச அனுகூலங்களைப் பெறும் காப்பகத்தில் நீங்கள் எவ்வாறு உங்கள் கொடைகளைச் செய்யலாம் என்று என்னிடம் கேள்வி கேட்கப்பட்டது. நாங்கள் செய்வது மனிதாபிமான சேவை.

எம்மவர் – பிறர், நாங்கள் – அவர்கள் என்ற பாகுபாடு எங்களிடையே அதிகமாக மேலோங்கியுள்ளதை அவதானிக்கின்றேன். அதனால் தமிழ்ச் சமூகம் சீரழிந்து செல்கின்றது என்பதை நாங்கள் உணர்வதில்லை. எங்கள் காரியாலய அறையில் காற்றாடியால் ஓர் ஆவணம் பறக்கத் தலைப்பட்டால் நாம் காற்றாடியின் விசையைக் குறைத்து ஆவணத்தைப் பற்றிக் கொள்கின்றோம். அதற்காக ஆவணத்தைப் பிடிக்க துள்ளித் துள்ளி ஓடுவது கெட்டித்தனமான ஒரு செயலல்ல. அதே போல் இன்று எமது சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் பலவிதமான அல்லல்களுக்கும் பிறழ்வுகளுக்கும் எம் இனத்தவரையே குறை கூறிப் பயனில்லை.

காற்றாடியின் விசையைக் குறைப்பது போல் மத்திய அரசு எங்கள் மீது கொண்டிருக்கும் அழுங்குப் பிடியைத் தளர்த்த நாம் ஆவன செய்ய வேண்டும். அதனால்தான் நான் முதலமைச்சராக வந்த நாளில் இருந்து படையினரை எமது மாகாணங்களில் இருந்து மீளப்பெறுங்கள் என்று கோரி வருகின்றேன்.

போர்க்காலத்தில் இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் சுனாமியின் போது ஒன்று சேர்ந்து சில நாள்கள் மனிதாபிமான மக்கள் சேவையில் ஈடுபட்டார்கள். ஆகவே நாங்கள் மனிதாபிமான செயல்களில் ஈடுபடும் போது எமது வேற்றுமைகளையும் விரோதங்களையும் வித்தியாசங்களையும் முதன்மைப் படுத்தாமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்மைகளைப் பெற்றுத்தர பாடுபடுவோமாக!

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை கண்டுபிடிப்பதற்கும் அநீதிக்கு எதிராக நீதியைப் பெற்றுக் கொள்வதற்கும் வீதிகளில் நின்று பல வருடங்களாக போராடி வந்துள்ளார்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர். அரசு அவர்களின் கோரிக்கைகளை செவிமடுக்காமல் பொறுப்பற்ற வகையில் நடந்து வருகின்றது. எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் எமது கோரிக்கைகளை செயற்படுத்த அவை முன்வரா.

எமது பிரதேசங்களில் திட்டமிட்டு மேற்கொண்ட தமது அனைத்துக் குற்றங்களையும் திட்டமிட்டு மூடி மறைக்கும் செயற்பாடுகளிலேயே அரசுகள் ஈடுபட்டு வருகின்றன.

அதனால்தான் ஜெனீவா மனித உரிமைகள் சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் ஊடாக பரிகாரங்களைப் பெற்றுக் கொள்ளும் விதமாக முதலமைச்சராகத் தெரிவுசெய்யப்பட்ட காலம் முதல் அவற்றை வலியுறுத்தி வருகின்றேன். மனித உரிமைகள் சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்கள் கூட்டணியின் நிலைப்பாடு. இந்தத் தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவதற்கு எத்தகைய செயற்பாடுகளை நாம் முன்னெடுக்க வேண்டும், எவ்வாறு சர்வதேச சமூகத்துக்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் என்பவை குறித்து நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

இந்தச் சந்தர்ப்பதில் நான் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அதாவது, அண்மையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைத் தீர்த்து வைப்பதிலும் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதிலும் இலங்கையின் உயர்மட்ட நீதித்துறை செயற்பட்ட விதம் மெச்சப்படக்கூடியது; மெச்சுகின்றோம். ஆனால், இதனை ஒரு உதாரணமாக எடுத்துக்கொண்டு போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலை விடயங்களில் இலங்கை நீதிமன்றங்களின் ஊடாக நியாயமான தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சர்வதேச சமூகம் சிந்திக்கக்கூடாது.

இரு இனங்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஏற்பட்டதே இனப்படுகொலை. பிழையான சரித்திரங்களை, வரலாறுகளை மக்கள் மனதில் உள்ளேற்றியதால் ஏற்பட்டதே இனப்படுகொலை.

ஆனால், அண்மையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி என்பது நாட்டுக்கு ஏற்பட்ட ஒரு பொதுவான பிரச்சினை. ஜனநாயகம் சம்பந்தமான பிரச்சினை அங்கே இன ரீதியான பக்கச் சார்பான செயற்பாடுகளுக்கு இடம் இருக்கவில்லை. இனப்பிரச்சினை விடயத்தைப் பொறுத்தவரையில், இலங்கையின் எல்லா தேசிய நிறுவனங்களுமே இன ரீதியாகப் பிளவடைந்து நிற்கின்றன. அரசாலும் பெரும்பான்மை இன மக்களினாலும் கட்டுப்படுத்தப்படும் இந்த நிறுவனங்களில் எமக்கான நீதியை நாம் எதிர்பார்க்க முடியாது.

இதற்கு நீதித்துறை விதிவிலக்கல்ல. அதனால்தான் உள்ளக விசாரணையை தமிழ் மக்கள் கூட்டணி எதிர்க்கின்றது. ஐ.நா. கண்காணிப்புடன் கூடிய வெளிநாட்டு நீதிபதிகளின் பங்குபற்றுதலுடன் கூடிய விசாரணையே சுதந்திரமான உண்மையான நீதியைப் பெற்றுத்தரக் கூடியது.

காணாமற்போனோரின் குடும்பத்தவர்களுக்கு நீதியைப் பெற்றுத்தருவதானால் இவ்வாறான வெளிநாட்டு நீதித்துறையினரின் பங்குபற்றுதலுடன் நடைபெறும் விசாரணைகளே அவற்றைப் பெற்றுக் கொடுப்பன என்பதில் சந்தேகம் ஏதும் இருக்க முடியாது – என்றார்.

(ஐ)

## நாளை

31.12.2018
திங்கட்கிழமை
நட்சத்திரம்: சித்திரை பி.ப 12.38 வரை
திதி : தசமி பி.இ 5.10 வரை
சுபநேரம் : 12.29 – 1.59 வரை
இராகுகாலம் : 7.59 – 9.29 வரை

# மத்திய வங்கிக்குள் மறைமுகச் சூழ்ச்சி?

## சந்தேகம் வெளியிடுகிறார் ரவி

கொழும்பு, டிசெ. 30

மத்திய வங்கியில் சில மறைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்படுகிறதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. மின் வலுத் துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க இந்தச் சந்தேகத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொருளாதாரத்தைப் பாதிக்கும் வகையில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியை மத்தியவங்கியில் சிலர் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள் போல் உள்ளது. மஹிந்த ராஜபக்ஷ சட்டவிரோத பிரதமராக நியமிக்கப்பட்டபோது ரூபாவின் பெறுமதியில் வீழ்ச்சி குறைந்திருந்தது.



எனினும் மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்ததும் ரூபாவின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சியடைந்து செல்கிறது. எனவே மத்திய வங்கியில் மறைமுகமாகச் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறதா?

எனவே மத்திய வங்கியில் உள்ள இவ்வாறான சூழ்ச்சியில் ஈடுபடுகின்றவர்கள் நீக்கப்படவேண்டும் – என்றார். (ஐ)

# தென்கிழக்கு பல்கலையில் மருத்துவ பீடம்

மட்டக்களப்பு, டிசெ. 30

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தாதியர் கற்கைப் பிரிவொன்றையும் உருவாக்குவதற்காக திட்ட வரைவொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# வவுனியாவில் கடும் மழையால் 3588 ஏக்கர் நெற்செய்கை அழிவு

வவுனியா, டிசெ. 30

வவுனியாவில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக 3588.75 ஏக்கர் விவசாய நிலங்கள் அழிவடைந்துள்ளன என கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் இ.விஜயகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வவுனியா மாவட்டத்தில் 48 ஆயிரத்து 902 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்த நிலையில் தற்போது 48 ஆயிரத்து 914 ஏக்கர் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய நீர்ப்பாசனத்துக்கு உட்பட்ட குளங்களில் ஆறாயிரத்து 529 ஏக்கர் நிலப்பரப்பிலும், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழான நடுத்தரக் குளங்களின் கீழ் ஐயாயிரத்து 585 ஏக்கரும், எமது திணைக்களத்துக்கு உட்பட்ட 661 குளங்களில் 29 ஆயிரத்து 800 ஏக்கரும், மானாவாரி அடிப்படையில் 7 ஆயிரம் ஏக்கரும் என மொத்தமாக 47 ஆயிரத்து 914 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 29 ஆயிரத்து 895 ஏக்கருக்கு விவசாயிகள் உரமானியத்தைப் பெற்றுள்ளார்கள்.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இதுவரை 3588.75 ஏக்கர் அழிவடைந்துள்ளது. இதில் 90 வீதமான நெற்செய்கை வவுனியா வடக்குப் பிரதேசத்தில் அழிவடைந்துள்ளது. அதேபோன்று யானைகளால் 17 ஏக்கர் நெற்செய்கை அழிவுக்கு உட்பட்டுள்ளது. உழுந்து பயிர்ச்செய்கையில் 150 ஏக்கர் வெள்ளத்தால் அழிவடைந்துள்ளது. இது தொடர்பான தகவல்களைத் திரட்டி வருகிறோம் - என்றார். (ஐ -100)

# பொலிஸ் சித்திரவதையால் சந்தேகநபர் கழுத்தை அறுத்துத் தற்கொலை முயற்சி

## ஒரு மாதத்துக்குள் கோப்பாய் பொலிஸாரின் இரண்டாவது அட்டூழியம் இது என விசனம்

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதைக்குள்ளான இளைஞன், கழுத்தை அறுத்துத் தற்கொலைக்கு முயற்சித்த இரண்டாவது சம்பவமும் பதிவாகியுள்ளது.

கடந்த மாத இறுதியில் சட்டவிரோதமாக தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் கழுத்தை அறுத்துத் தற்கொலைக்கு முயற்சித்த அதே பாணியில் இந்த இளைஞரும் முயற்சித்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை கோப்பாய் பொலிஸ் நிலையத் தடுப்புக்காவல் கூடத்தில் இடம்பெற்றுள்ளது.

தனக்கு நடந்த கொடுமைகளை அந்த இளைஞர் யாழ்ப்பாணம் நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் வெளிப்படுத்தினார். அவருடன் தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞனும் பொலிஸ் நிலையத்தில் நடந்தவற்றை நீதிவான் முன்னிலையில் தெரிவித்தார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்மையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இருவரைப் பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் முற்படுத்தினர்.

சந்தேக நபர்களை இரண்டு நாள்களுக்குமேலாகப் பொலிஸார் தடுத்துவைத்திருந்தனர் என்று நீதிவானிடம் முறையிடப்பட்டது.

"என்னை மூன்று நாள்களாகத் தடுத்து வைத்துப் பொலிஸார் கடுமையான சித்திரவதைக்குட்படுத்தினர். அதன் வலி தாங்க முடியாமல் பிளேட்டால் எனது கழுத்தை அறுத்துத் தற்கொலைக்கு முயற்சித்தேன். பொலிஸாரின் தாக்குதலால் எனது கைகள் இரண்டும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன" என்று சந்தேகநபர் நீதிவானி டம் தெரிவித்தார்.

தற்கொலைக்கு முயற்சித்த சந்தேக நபரின் நிலைமையையும் தனக்கு நடந்த சித்திரவதையையும் மற்றைய சந்தேகநபரும் நீதிவானிடம் கூறினார்.

சந்தேகநபர்கள் இருவரையும் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்திப் பெற்றுக்கொண்ட சட்ட மருத்துவ அறிக்கையும் பொலிஸார் சமர்ப்பித்தனர்.

சந்தேக நபர்கள் மீதான குற்றச்சாட்டை விசாரித்த நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், அவர்களைப் பிணையில் விடுக்க உத்தரவிட்டார். (ஐ -07)

# நிறுவை, அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட சகல வர்த்தகர்களுக்கும்

நிறுவை அளவை உபகரணங்கள் முத்திரையிடல் தொடர்பில் யாழ். வணிகர் கழகம் அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

அந்த அறிவுறுத்தலில் –

மாவட்ட செயலகத்தின் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு, ஜனவரி 07, 08, 09, 10 மற்றும் 11 ஆகிய தினங்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00மணி வரை அனைத்து தராசு, படிகள், லீற்றர் அளவைகள், மீற்றர் கோல்கள் ஆகிய கருவிகளைப் பரிசோதித்துப் பார்த்து முத்திரையிடவுள்ளது என்றும் –

முத்திரை பதிக்காது நிறுக்கும், அளக்கும் உபகரணங்களை வர்த்தகத்திற்கு பாவிப்பது மாத்திரமல்ல, வைத்திருப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும் –

எனவே அனைத்து வர்த்தகர்களும் இதனைக் கருத்தில் கொண்டு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களுடைய தராசுகளுக்கு முத்திரையிடுமாறும் யாழ் வணிகர் கழகம் அதில் குறிப்பிட்டுள்ளது.

# புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு

யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் 28ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் ரி.தேவானந்த தலைமையில் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாக பேராசிரியர் ரி.வேல்நம்பியும் அதிதியாகஎம்.செல்வினும் கலந்து சிறப்பித்திருந்தனர். இக் கூட்டத்தில் நிதி, நிர்வாக, அபிவிருத்தி, செயற்பாட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 2019 ஆம் ஆண்டுக்கான நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் வி. முருகதாஸ் (அறவழிப்போராட்டக் குழு), செயலாளர் வி.தியாகேந்திரன் (தியாகி அறக்கொடை நிறுவனம்), பொருளாளர் வி.சுதர்சன் (யாழ். சமூக மேம்பாட்டு மையம்), உபதலைவர் செல்வி பி.ஜமுனாதேவி (வட இலங்கை சர்வோதயம்), உபசெயலாளர் என். இராசரத்தினம் (வடமராட்சி நல்வொழுக்க நிறுவனம் ஆகியோரும் –

அங்கத்தவர்களாக – ரி.தேவானந்த் (அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்), கே. யாழினி (எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம்), எஸ். பார்த்தீபன் (குடும்ப புனர்வாழ்வு மையம்), எம். மரியகொன்சலீனா (சொண்ட்) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# மேலும் பல ஏக்கர் காணி கிழக்கில் விடுவிக்கப்படும்

## வியாழேந்திரன் நம்பிக்கை



மட்டக்களப்பு, டிசெ. 30

கிழக்கில் இராணுவம், பொலிஸார், கடற்படையினர் வசமுள்ள இன்னும் பல காணிகளை விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கிழக்கில் காணிகள் சில விடுவிக்கப்பட்டன. இது குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து உள்ளனர். இவ்வாறான பிரச்சினைகளை தீர்க்கவேண்டும் என்ற அடிப்படையில், ஜனாதிபதி தலைமையிலான அரசோடு இணைந்து இணக்க அரசியல் ஊடாகத் தீர்க்க முற்பட்டோம். அதன்படி, காணி விடுவிப்பு விடயத்தில் முதற்கட்டமாகத் தனியார் வாழ்வாதாரக் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம தலைமையில், கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் அருன கலந்து கொண்டு 8.5 ஏக்கர் காணிகளை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

விடுவிக்கப்படாமல் இருக்கும் காணிகளை விடுப்பதற்கான நடவடிக்கையை ஜனாதிபதி எதிர்வரும் காலங்களில் முன்னெடுப்பார் என நான் நம்புகின்றேன்.

நான் ஜனாதிபதியோடு இணைந்தமை குறித்து பல்வேறு கருத்துக்களை தெரிவிக்கும் அரசியல் தலைமைகள் நான் எனது இனம் சார்ந்த விடயத்தில் இதுவரை சற்றும் பிசகாமல் நிற்கிறேன் என்பதை உணர வேண்டும் . இந்த நாட்டை யார் ஆண்டாலும் என் இனத்தின் இருப்பு பாதுகாக்கப்பட நாம் எந்த எல்லைக்கும் செல்லலாம்.மற்றைய சமூகங்கள், அவர்கள் சார்ந்த அரசியல்வாதிகள் அதைத் தான் செய்கிறார்கள் .

பேச்சை விட்டுவிட்டு மக்களைக் காப்பாற்ற என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யுங்கள். இது வெறுமனே ஆரம்பம் மட்டும் தான் எதிர்காலத்தில் இன்னும் நிறைய நடக்க இருக்கிறது – என்றார். (ஐ)

# கடும் பனிமூட்டத்தால் விபத்து ஹரியானாவில் ஏழு பேர் சாவு

அம்பாலா,டிசெ.30

ஹரியானா மாநிலத்தில் கடும் பனிமூட்டம் காரணமாக ஏற்பட்ட சாலை விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

வடமாநிலங்களில் தற்போது கடும் குளிருடன் பனிப்பொழிவும் அதிகரித்துள்ளது. கண்ணை மறைக்கும் பனிமூட்டம் காரணமாக சாலைப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

காலையில் வெகுநேரம் ஆகியும் பனிமூட்டம் விலகாததால் வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரிய விட்டபடியே மெதுவாகச் செல்ல வேண்டி உள்ளது. ஆனாலும் ஒரு சில பகுதிகளில் பனி மூட்டத்தால் விபத்து ஏற்படுகிறது.

இந்நிலையில், ஹரியானா மாநிலம் சண்டிகர் - அம்பாலா தேசிய நெடுஞ்சாலையில் இன்று காலை கடும் பனி மூட்டத்திற்கு மத்தியில் சென்றுகொண்டிருந்த ஒரு லொறி, கட்டுப்பாட்டை இழந்து





இரண்டு சொகுசு கார்கள் மீது மோதியது. அம்பாலா அருகே நிகழ்ந்த இந்தவிபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். 4 பேர் காயமடைந்தனர். உயிரிழந்தவர்கள் சண்டிகரைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

இதேபோல் திங்கட்கிழமை ஜஜ்ஜார் மாவட்டத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 8 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

## விண்வெளிக்கு மனிதனை அனுப்புவதற்கு இந்தியா ரூ.10 ஆயிரம் கோடி ஒதுக்கீடு!

### மூவரின் ஒரு வாரப் பயணத்துக்கான திட்டச் செலவு

பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற இந்திய அமைச்சரவைக் கூட்டத்தில், விண்வெளிக்கு 3 இந்தியர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்துக்கு 10 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்க ஒப்புதல் வழங்கப்பட்டது.

அமைச்சர்வைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து மத்திய சட்ட அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது இவ்விடயம் குறித்து அவர் கூறியவை வருமாறு:-



பிரதமர் நரேந்திர மோடி தனது சுதந்திர தின விழா உரையில், 2022ஆம் ஆண்டுக்குள் இந்தியா விண்வெளிக்கு ஆள்களை அனுப்பும் என்று அறிவித்தார். இதற்காக ஏற்கனவே ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் உதவியை பெறுவதற்காக ஒப்பந்தமும் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் (இஸ்ரோ) 3 இந்தியர்களை 7 நாள்களுக்கு விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்துக்கு ரூ.10 ஆயிரம் கோடி ஒதுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் இந்த முதல் முயற்சியை நிதி ஒதுக்கப்பட்ட 40 மாதங்களுக்குள் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது

# காஷ்மீரில் நான்கு தீவிரவாதிகளை இந்தியப் படையினர் கொன்றனர்



காஷ்மீரில் நேற்றுக் காலை பாதுகாப்புப் படையினருடன் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 4 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

தெற்குக் காஷ்மீரில் ஹன்ஜன் பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து பாதுகாப்புப் படையினர் நேற்றுக் காலை தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து ராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்தவை வருமாறு:-

பாதுகாப்புப்படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அங்கே மறைந்திருந்த தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். பாதுகாப்புப் படையினரும் இதற்கு பதிலடி கொடுத்தனர். இத் துப்பாக்கிச் சண்டையில் 4 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

துப்பாக்கிச்சூடு நடைபெற்ற இடத்தில் தீவிரவாதிகள் பயன்படுத்திய ஆயுதங்கள் மற்றும் வெடிபொருல்கள் மீட்கப்பட்டன.

இதில் கொல்லப்பட்ட தீவிரவாதிகள் யார், யார், அவர்கள் எக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்பன போன்ற விவரங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

- இவ்வாறு ராணுவ உயரதிகாரி தெரிவித்தார்.

அப்பகுதியில் தேடுதல் மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கை மேலும் தொடர்ந்து நடைபெற்றுவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சிக்கிமில் கடும் பனிப் பொழிவில் சிக்கிய 2,500 பயணிகள் மீட்பு!

## இந்திய இராணுவம் துரித நடவடிக்கை



கேங்டாங்,டிசெ.30

சிக்கிமில் கடும் பனிப்பொழிவில் சிக்கித் தவித்த 2,500 சுற்றுலாப்பயணிகளை இந்திய இராணுவம் பத்திரமாக மீட்டது.

இந்திய வடமாநிலங்களில் கடந்த சில நாள்களாகக் கடுமையான குளிர் வாட்டி வதைத்து வருகிறது. பீஹார், உத்தரபிரதேசம், குஜராத், ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களில் உறைய வைக்கும் அளவுக்கு குளிர் காற்று வீசுகிறது. ஜம்மு காஷ்மீர், இமாச்சல பிரதேசம், சிக்கிம் உள்ளிட்ட மாநிலங்களில் கடும்பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதனால் சாலைப் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சிக்கிம் மாநிலத்தில் நிலவும் கடுமையான பனிப்பொழிவு காரணமாக சாலைகளில் வாகனங்கள் செல்ல முடியாத அளவிற்கு பனி படர்ந்துள்ளது. இதனால் சுற்றுலாப் பயணிகளின் வாகனங்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன. இந்தியா- சீனா எல்லைக்கு மிகவும் அருகாமையில் உள்ள நதுலா என்ற இடத்திற்குச் சுற்றுலா சென்றவர்கள், கடும் பனிப்பொழிவால் அந்த பகுதியை விட்டு வெளியேற முடியாத நிலை ஏற்பட்டது.

இதுபற்றி தகவல் அறிந்த இராணுவ வீரர்கள், அங்கு சென்று பனிப்பொழிவில் சிக்கித் தவித்த சுமார் 2500 சுற்றுலாப் பயணிகளைப் பத்திரமாக மீட்டு முகாம்களில் தங்க வைத்தனர். அவர்களை சொந்த ஊர்களுக்கு அனுப்பும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

# வெளிநாட்டுப் பயணங்களில் சாதனை படைக்கும் மோடி!

குறைந்த காலத்தில் அதிக நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் என்ற சாதனையை நரேந்திர மோடி விரைவில் எட்டவுள்ளார். அவரின் பயணங்களுக்காகக் கடந்த 2014 ஆம் ஆண்டில் இருந்து இப்போது வரை ரூ.2,021 கோடி செலவாகி இருப்பதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி, கடந்த 4 ஆண்டுகள் 7 மாதங்களாக அதிகாரத்தில் உள்ளார். தற்போது இன்னொரு மைல் கல்லையும் நெருங்கி வருகிறார்.

அடுத்த சில மாதங்களில், நாடாளுமன்றத் தேர்தல் வர உள்ளது. அதற்குள் இன்னும் இரண்டு நாடுகளுக்கு சென்றால் அதிக வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்ட இரண்டாவது இந்திய பிரதமராக அவர் இருப்பார். மறைந்த முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி 113 நாடுகளுக்கும் மேல் பயணம் செய்து உள்ளார். இதுவரை பிரதமர் மோடி 92 நாடுகளுக்கு பயணம் செய்து உள்ளார். மன்மோகன் சிங் பிரதமராக இருந்த போது 93 நாடுகளுக்கு பயணம் செய்து உள்ளார்.



மோடி 5 ஆண்டுகளுக்கும் குறைவான காலத்தில் 92 நாடுகளுக்கு பயணம் செய்து உள்ளார். மன்மோகன் சிங் தனது 2 ஆட்சி காலங்களில் (10 ஆண்டுகளில்) 93 நாடுகள் பயணம் செய்து உள்ளார். இந்திராகாந்தி தனது 3 ஆட்சி காலங்களில் (15 ஆண்டுகள்) 113 நாடுகளுக்கு பயணம் செய்து உள்ளார்.

மோடியின் இந்த 92 நாடுகள் பயணத்திற்கு சுமார் ரூ.2021 கோடி ரூபாய் செலவாகி உள்ளது. இதனை ஒப்பிடும்போது மோடி தனது 5 ஆண்டுகளுக்கும் குறைந்த காலத்தில் பயணம் செய்து உள்ளார். காங்கிரஸ் ஆட்சியின் போது மன்மோகன்சிங்கின் 50 வெளிநாட்டு பயணங்களுக்கு ரூ.1350 கோடி செலவழிக்கப்பட்டு இருந்தது.

# 2ஆம் உலகப் போர் காலத்து 450 கிலோ வெடிகுண்டு மீட்பு

## கொல்கத்தா ஹூக்ளி நதிக் கரையில்

கொல்கத்தா,டிசெ.30

இரண்டாவது உலகப் போர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட 450 கிலோ எடையிலான வெடிக்காத குண்டு ஒன்று கொல்கத்தாவில் தூர்வாரும் பணியின்போது கண்டெடுக்கப்பட்டது.

கொல்கத்தாவில் ஹூக்ளி நதியை ஒட்டியுள்ள கரைப்பகுதியில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், நதியையொட்டியுள்ள நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் துறைமுகம் பகுதி அருகே நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தபணியின்போது 450 கிலோ எடையிலான நான்கரை கிலோ மீற்றர் நீளமுள்ள வெடிக்காத குண்டு கண்டெடுக்கப்பட்டது.

இரண்டாம் உலகப்போரின் போது இந்தப் பகுதியை அமெரிக்கக் கடற்படையினர் பயன்படுத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வெடிகுண்டைச் செயலிழக்க வைப்பதற்காக இராணுவம் மற்றும் கடற்படையினருக்குத் தகவல் அளிக்கப்பட்டுள்ளதாக கொல்கத்தா துறைமுகத் தலைவர் வினீத் குமார் தெரிவித்துள்ளார்.



# ட்ரம்ப் திடீர் ஈராக் பயணம்


அமெரிக்க ராணுவ வீரர்களுடன் ட்ரம்ப்

அமெரிக்க அதிபரான பிறகு ஈராக்குக்கான தனது முதல் பயணத்தைத் திடீரென மேற்கொண்டிருக்கிறார் டொனால்ட் ட்ரம்ப். இந்தப் பயணத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புடன் அவரது மனைவி மெலானியா ட்ரம்ப்பும் சென்றிருக்கிறார்.

இதுகுறித்து ஊடகங்கள் தரப்பில், ஈராக்கின் மேற்குப் பகுதியில் உள்ள, அமெரிக்க இராணுவத் தளவாடம் உள்ள அல் அசாத்துக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மற்றும் அவரது மனைவி மெலானியா ட்ரம்பும் திடீரெனப் பயணம் மேற்கொண்டுள்ளனர். முன்னரே அறிவிக்கப்படாத இந்தப் பயணம் சிரியாவிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறும் என்று ட்ரம்ப் அறிவித்த சில நாள்களில் நடந்துள்ளது என்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் பயணம் குறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப், நானும் மெலானியாவும் அல் அசாத்துக்குச் சென்று நமது இராணுவ வீரர்களைச் சந்தித்தோம். இறைவன் அமெரிக்காவை ஆசிர்வதிக்கட்டும் என்று பதிவிட்டுள்ளளார்.

இந்த நிலையில் அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும் என ஈராக் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இது குறித்து ஈராக் நாடாளுமன்ற உறுப்பினர், “ட்ரம்ப் தனது எல்லை என்ன என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அமெரிக்கப் படைகள் ஈராக்கை ஆக்கிரமித்தது போதும்” என்று தெரிவித்துள்ளார்.

# வடக்கு நகருக்குள் சிரிய படைகள் ஆறு வருடங்களின் பின் நுழைந்தன

சிரியா அரசின் ஆதரவுப் படைகள், நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள மன்பிஜ் நகரில் நுழைந்துவிட்டன. ஆறு ஆண்டுகளுக்கு பின் சிரியா அரசு தரப்பு முதன் முறையாக இந்த நகருக்குள் நுழைந்திருப்பதாக இராணுவச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

அந்தப் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் குர்து இனப் படைகள், அங்கு துருக்கிப் படைகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் எழுந்திருப்பதால், சிரிய அரசிடம் உதவி கோரியிருந்தன.

குர்துக்களின் YPG படைகள் தீவிரவாதக் குழுக்களில் ஒன்று என துருக்கி கருதுகிறது.

சிரியாவில் இருந்து படைகளை விலக்கிக் கொள்வதாக அண்மையில் அமெரிக்கா வெளியிட்ட அறிவிப்பு அமெரிக்க படைகளின் ஆதரவை பெற்றிருந்த குர்துக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அமெரிக்கப் படைகள் எப்போது திரும்பப் பெறப்படும் என்பது குறித்து தெளிவில்லை.



சிரியாவில் ஐ.எஸ். அமைப்பினர் வீழ்த்தப்பட்டுவிட்டனர் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தாம் வெளியிட்ட டிவிட்டர் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு சிரியாவில் இருந்து ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிக்க சுமார் 2,000 அமெரிக்கப்படையினர் உதவிசெய்தனர். இன்னும் சில பகுதிகளில் சண்டை நடந்துகொண்டுதான் இருக்கிறது. வடக்கு சிரியாவில் உள்ள குர்துப் பகுதியில் அமெரிக்கப் படைகள் பெருமளவில் நிலைகொண்டுள்ளன.

சிரியாவில் பெரும் பரப்பளவை நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஐ.எஸ். குழுவினர் கைப்பற்றினர். அத்துடன், சிரியா மற்றும் ஈராக்கின் சுமார் எட்டு மில்லியன் மக்கள் மீது கடுமையான ஆட்சியை கட்டவிழ்த்துவிட்டது இந்த ஐ.எஸ். குழு.

இந்நிலையில் சிரியாவின் குர்துப் போராளிகள் மற்றும் அரபி போராளிகள் (சிரிய ஜனநாயகப் படையினர்) ஆகியோருடன் கூட்டு சேர்ந்து அமெரிக்கப் படையினர் கிட்டத்தட்ட ஐ.எஸ். குழுவினரை ஒழித்து அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை மீட்டனர்.

ஆனால், ஐ.எஸ். தீவிரவாதக் குழு முற்றிலும் அழிந்துவிடவில்லை. சிரியாவில் இன்னமும் 14,000 ஐ.எஸ். போராளிகள் இருக்கின்றனர் எனவும், இதைவிட அதிக எண்ணிக்கையில் அருகில் உள்ள ஈராக்கில் அவர்கள் உள்ளனர் எனவும் சமீபத்திய அமெரிக்க அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

இந்தத் தீவிரவாதக் குழுவினர் கொரில்லாப் போர்முறைக்கு மாறி தங்கள் அமைப்பை மீண்டும் கட்டமைக்க முயல்வார்கள் என்ற அச்சம் நிலவுகிறது.

# அரசுத் துறைகள் முடக்கம் அமெரிக்காவில் தொடர்ந்தும்

வொஷிங்டன், டிசெ.30

அமெரிக்காவில் அரசு துறைகள் முடக்கம் தொடர்கிறது.

பிற நாடுகளைச் சேர்ந்த அகதிகள் அமெரிக்காவில் தஞ்சம் கோருகின்றமையை ஜனாதிபதி டிரம்ப் விரும்பவில்லை.

அண்டை நாடான மெக்ஸிக்கோவில் இருந்து அமெரிக்காவிற்குள் சட்ட விரோதமாக யாரும் நுழையாதபடிக்கு அமெரிக்க – மெக்ஸிக்கோ எல்லையில் பிரமாண்ட சுவர் எழுப்புவேன் என்று 2016 ஆம் ஆண்டுத் தேர்தலின் போது டிரம்ப் வாக்குறுதி அளித்தார்.

அதன்படி எல்லையில் சுவர் எழுப்ப மெக்ஸிக்கோவிடம் ட்ரம்ப் நிதி கேட்டார். ஆனால் அந்த நாடு தர மறுத்துவிட்டதால் உள்நாட்டு நிதியை பயன்படுத்த வேண்டிய நெருக்கடி உருவானது. இதற்காக உள்நாட்டு நிதி ஐந்நூறு கோடி டொலர் (இலங்கைப் பணத்தில் சுமார் ரூ.90ஆயிரம் கோடி) வழங்க வேண்டும் என்று, அமெரிக்க நாடாளுமன்றத்தை டிரம்ப் வலியுறுத்தி வருகிறார்.

ஆனால் மெக்ஸிக்கோ எல்லைச்சுவருக்காக நாட்டு மக்களின் வரிப்பணத்தை பயன்படுத்தக்கூடாது என்றும், அந்த திட்டத்தையே ரத்து செய்ய வேண்டும் என்றும் கூறும் ஜனநாயக கட்சி, செலவினப் பிரேரணையை நிறைவேற்ற ஆதரவு அளிக்க மறுத்து விட்டது. இதன் காரணமாக வெளியுறவு, உள்நாட்டு பாதுகாப்பு, போக்குவரத்து, விவசாயம், நீதித்துறை உள்ளிட்ட 9 துறைகள் முடங்கின.



இந்த நிலையில் கடந்த வியாழனன்று பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபை கூடியன. இதில் பெரும்பாலான உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை.

இருந்தபோதிலும் உறுப்பினர்களின் கூட்டத்தில் அரசு துறைகள் முடங்கியமையைச் சரி செய்வதற்கான எந்த முடிவும் எட்டப்படவில்லை. மேலும் இரு சபைகளும் நாளை திங்கட்கிழமை வரை ஒத்தி வைக்கப்பட்டு உள்ளன. இதனால் அரசு துறைகளின் முடக்கம் தொடர்ந்து நீடிக்கிறது.

அதே சமயம் மெக்ஸிக்கோ எல்லையில் சுவர் எழுப்புவேன் என்கிற தனது முடிவில் ட்ரம்ப் விடாப்பிடியாக உள்ளார். இதனால் அரசு துறைகளின் செயலிழப்பு புத்தாண்டு வரை தொடரும் நிலை உருவாகி உள்ளது.

இந்தக் குழப்பமான சூழலால் அரசு ஊழியர்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகி உள்ளனர். ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் கட்டாய விடுப்பில் செல்ல வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டு உள்ளனர்.

எனினும் அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுமா என்பது தெரியவில்லை.

# பிரான்ஸைத் தொடர்ந்து தைவானிலும் மக்களின் மஞ்சள் அங்கிப் போராட்டம்

பிரான்ஸைத் தொடர்ந்து தைவானிலும் மஞ்சள் அங்கி போராட்டம் வெடித்துள்ளது.

பிரான்ஸில் பெற்றோல் மற்றும் டீசல் மீதான வரியை அரசு உயர்த்தியமை மஞ்சள் அங்கிப் போராட்டம் என்ற மக்கள் எழுச்சிப் போராட்டத்துக்கு வித்திட்டது.

கார் சாரதிகள்தான் முதலில் இந்தப் போராட்டத்தைத் தொடங்கினர். அதன்பிறகு மஞ்சள் அங்கி அணிந்த மக்கள் அவர்களுடன் கைகோத்ததும் போராட்டம் விஸ்வரூபம் எடுத்தது.

இந்தப் போராட்டத்தில் பயங்கர வன்முறை வெடித்தது. 10 இற்கும் மேற்பட்டோர் உயிர் இழந்தனர். ஒரு மாதத்துக்கு மேல் நடந்த இந்த போராட்டத்துக்கு அரசு பணிந்தது. வரி உயர்வை இரத்து செய்வதாக அறிவித்தது.

இந்த நிலையில் பிரான்ஸைத் தொடர்ந்து தைவானும் மஞ்சள் புரட்சியில் இறங்கியுள்ளது. குறைந்தபட்ச வரி விதிப்பு வேண்டும் என்றும், வரி விதிப்பில் பாரபட்சமின்றி செயல்படக் கோரியும்




ஆயிரக்கணக்கான தைவான் மக்கள் வியாழனன்று வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மஞ்சள் நிற உடைகளை அணிந்து, வரிவிதிப்பு கொள்கைகள் சட்ட ரீதியாக இல்லை என்ற பதாகைகளை ஏந்தி நிதி அமைச்சகம் முன்பு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# சீனாவின் தொலைதொடர்பு நிறுவனங்கள் இரண்டுக்கு தடை உத்தரவு வழங்கியது அமெ.

சீனாவின் இரண்டு பிரபல தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்குத் தடை விதிக்கும் அதிரடி முடிவை ட்ரம்பின் அமெரிக்க நிர்வாகம் எடுத்திருக்கிறது. சீனாவைச் சேர்ந்த பிரபல பன்னாட்டு தொலைதொடர்பு நிறுவனம் ஹுவாய்.

ஈரான் மற்றும் வடகொரியா மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடைகளை மீறி அந்நாடுகளுடன் ஹுவாய் நிறுவனம் வர்த்தகம் வைத்துக் கொண்டதாக முறைப்பாடு எழுந்தது. இது தொடர்பாக அந்த நிறுவனம் மீது கடந்த ஏப்ரல் மாதம் அமெரிக்கா விசாரணையை தொடங்கியது.

இதற்கிடையில் ஹுவாய் நிறுவன அதிபரின் மகளும், நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியுமான மெங்வான்ஜவ் கனடா நாட்டின் வான்கூவர் நகரில் கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டார். அவரை தங்கள் நாட்டுக்கு அனுப்பி வைக்குமாறு அமெரிக்கா கேட்டுக்கொண்டது.

இந்த நிலையில் ஹுவாய் மற்றும் சீனாவின் மற்றொரு தொலைதொடர்பு நிறுவனமான ‘செ.டி.இ.’ ஆகிய நிறுவனங்களுக்கு அமெரிக்காவில் தடைவிதிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இந்த 2 நிறுவனங்களும் தங்களின் தொலை தொடர்பு சாதனங்கள் மூலம் சீனாவுக்காக உளவு பார்ப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டுகிறது.

8 மாத காலமாக தீவிர ஆலோசனை நடத்தி இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும், வருகிற ஜனவரி முதல் வாரத்தில் இது தொடர்பான உத்தரவு பிறப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அமெரிக்கா, சீனா இடையே நீடித்து வந்த வர்த்தக போர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் நிலையில் அமெரிக்காவின் இந்த முடிவு அதனை பாதிக்கும் எனக் கருதப்படுகிறது.

## திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்து

21 டிசெம்பர் 2018 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களைசந்தித்து கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை தெரிவித்தார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருஅவையின் தலைமைப் பொறுப்பேற்ற பின்னர் கிறிஸ்மஸ் காலத்திலும் ஏனைய முக்கிய நாள்களிலும் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடி வருகிறார்.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களின் இதயமாக இயேசுவும்...

தன் மகனின் பிறப்புக்காக தன்னை தயாரிக்க தன் வீட்டிலேயே தங்க வேண்டிய அன்னை மரியா தன் வயது முதிர்ந்த உறவினருக்கு உதவிச் செய்ய சென்றதன் மூலம்; இயேசுவின் பிறப்பு ஓர் பிறரன்பின் நடவடிக்கையாக துவங்கியுள்ளதை காண்கிறோம். கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களின் இதயமாக இயேசுவும் உதவித் தேவைப்படும் சகோதர சகோதரிகளும் இருக்கவேண்டும் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# கத்தோலிக்க படைப்பாளிகளை பல துறைகளிலும் உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவை




பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் அனுசரணையுடன் கவிஞர் சூரியநிலா ஆ.ஜென்சன் றொனால்ட் எம்.எஸ்சி அவர்கள் எழுதிய மீட்பின் சுவடுகள் என்ற நூல் 15 டிசெம்பர் 2018 அன்று யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் யாழ்

**யாழ். ஆயர்**

மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழக ஊடக வருகை விரிவுரையாளர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தலைமையில் வெளியிடப்பட்டது.

இந்த நூலுக்கு எழுதியுள்ள ஆசியுரையிலேயே யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை கத்தோலிக்க படைப்பாளிகளை இன்று பல துறைகளிலும் உருவாக்க வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும் எனத் தெரிவித்துள்ளார்.

அவர் அந்த நூலுக்கு எழுதியுள்ள ஆசியுரையில் மேலும் தெரிவிக்கும்போது ஆ.ஜென்சன் றொனால்ட் என்ற இந்த இளம் படைப்பாளி தனது மற்ற பணிகள் மத்தியில் இந்த புத்தகத்தை வெளியிடுகின்றமை உண்மையில் பாராட்டப்பட வேண்டியதே. இதற்கு முன்னரும் இவர் பல படைப்புக்களை புத்தகங்களாகவும் இசைவெளியீடாகவும் வெளியிட்டுள்ளார் என அறிகிறோம். இவர் தன் பணியைத் தொடர்ந்து ஆற்ற வேண்டுமென்று வாழ்த்துகிறோம். இன்னும் அநேக கத்தோலிக்க படைப்பாளிகள் இவரின் பாதையை பின்பற்ற வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# ‘மீட்பின் சுவடுகள்” நூல் வெளியீட்டின்போது...

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் அனுசரணையுடன் கவிஞர் சூரியநிலா ஆ. ஜென்சன் றொனால்ட் எம்.எஸ்சி எழுதிய மீட்பின் சுவடுகள் என்ற நூல் வெளியீட்டில் பிரதம விருந்தினராக ஏ. ஜீவேந்திராப் போல் அடிகளாரும் சிறப்பு விருந்தினர்களாக மிருசுவில் பங்குத் தந்தை எக்ஸ் டபிள்யூ. டிஜம்ஸ் அடிகளாரும் பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் எஸ். றொசான் அடிகளாரும் கலந்து கொண்டனர். கவிஞர் சூரியநிலாஆ.ஜென்சன் றொனால்ட் அவர்களின் கலைப்பணியை பாராட்டி பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் வழங்கிய கலைமகன் எனும் பட்டத்தை பிரதம விருந்தினர் ஏ. ஜீவேந்திராப் போல் அடிகளார் வழங்கிக் கௌரவித்தார்.



**பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் அனுசரணையுடன் கவிஞர் சூரியநிலா ஆ.ஜென்சன் றொனால்ட் இன்**

# வெள்ளத்தால் இடம்பெயர்ந்தவர்களின் முகாம்களுக்கு யாழ். ஆயர் விஜயம்



அண்மைக்கால மழை வெள்ளத்தால் கிளிநொச்சியில் 3ஆயிரம் குடும்பங்களும் முல்லைத்தீவில் 4ஆயிரம் குடும்பங்களும்; இடம் பெயர்ந்துள்ளன. யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை இவ்வாறு இடம் பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் குடும்பங்களை நேரடியாக சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறி உலர் உணவுப் பொருள்களை வழங்கினார். இந்த உலர் உணவுப் பொருள்களை யாழ் கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் எஸ்.இயூஜீன் பிரான்சீஸ் அடிகளார் யாழ் மறைமாவட்ட பங்குகளில் இருந்து சேகரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அகில இலங்கை ரீதியில் மூன்றாமிடம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு

2018அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட போட்டியில் மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் சென் பற்றிக்ஸ் கல்லூரி நீர் கொழும்பு மாரிஸ் ஸ்ரெலா கல்லூரியை தண்ட உதை மூலம் 03:02 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

# உண்மையின் எண்ணங்கள்

மிருசுவில் பங்கை சேர்ந்த ஆ.ஜென்சன் றொனால்ட் அவர்கள் எழுதிய மீட்பின் சுவடுகள் என்ற நூல் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை இந்த நூலுக்கு வழங்கிய செய்தியில் கத்தோலிக்க படைப்பாளிகளை பல துறைகளிலும் உருவாக்க வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும்.

இந்த வகையில் கத்தோலிக்க படைப்பாளிகளை பாராட்டி தட்டிக்கொடுத்து வளர்த்தெடுக்க வேண்டிய தேவை கத்தோலிக்க திருச்சபைக்கு உண்டு என தெரிவிப்பது கவனத்துடன் நோக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறோம்.

ஆ.ஜென்சன் றொனால்ட் என்ற இந்த கத் தோலிக்க இளங்கலைஞன் தன் பணியை தொடர ‘காலைக்கதிர்’ கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறோம்.

# செல்வி கனிஸ்ரா சிவகுமார் புங்குடுதீவின் சாதனை மாணவி



புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் 07ஆம் தரத்தில் கல்வி கற்கின்ற புங்குடுதீவு பங்குத் திருச்சபையைச் சேர்ந்த செல்வி கனிஸ்ரா சிவகுமார் தன் மண்ணிற்கு மகா வித்தியாலயத்தில் தனது சாதனைகளால் பெருமை சேர்த்திருக்கிறார். அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற தமிழ் பேச்சுப் போட்டியில் 2ஆம் இடத்தையும் அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற திருவிவிலிய பேச்சுப் போட்டியில் 2ஆம் இடத்தையும் பெற்ற இவர் 01 டிசெம்பர் 2018 அன்று சிங்கப்பூரில் 8 நாடுகளுக்கிடையில் நடைபெற்ற 2018 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மாணவர் முழக்கத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றிருக்கிறார். இவரை இனம் கண்டு தெரிவு செய்த சென் ஜோண்ஸ் கல்லூரியின் ஆசிரியர் பரமானந்தம் எட்வேட் கஜன் அவர்களும் இவரை நெறிப்படுத்திய கோப்பாய் கலாசாலை விரிவுரையாளர் பாலசண்முகன் அவர்களும் பாராட்டுக்குரியவர்கள் புங்குடுதீவு பங்குத் திருச்சபையைச் சேர்ந்த செல்வி கனிஸ்ரா சிவகுமார் மேலும் சாதனைகள் படைக்க காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்கள்.

# ஹற்றனில் தீ விபத்து! 24 வீடுகள் தீக்கிரை!!



கொழும்பு, டிசெ. 30

ஹற்றன் – போடைஸ் 30 ஏக்கர் தோட்டத்தில் நேற்றுக் காலை 6.15 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 24 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாகத் தீக்கிரையாகியுள்ளன.

இந்த வீடுகளில் குடியிருந்த 108 பேர் நிர்க்கதியாகியுள்ளனர். இதில் ஆண்கள் 28 பேரும், பெண்கள் 35 பேரும், சிறுவர்கள் 45 பேரும் அடங்குகின்றனர்.

வீட்டில் இருந்தவாகள் கூச்சலிட்டதை அடுத்து அயலவர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முற்பட்டபோதும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை.

அதனையடுத்து ஹற்றன் பொலிஸார், ஹற்றன் டிக்கோயா நகர சபை தீயணைப்புப் படையினர், நுவரெலியா மாநகர சபை தீயணைப்புப் படையினர், மற்றும் பொது மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்தனர்.

சுமார் 3 மணித்தியாலங்களுக்கு பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.எனினும் சில வீடுகளில் இருந்த சில பொருள்களை மாத்திரம் அவர்களால் தீக்கு இரையாகாமல் வெளியில் கொண்டு வர முடிந்துள்ளது.

எனினும், சில வீடுகளில் இருந்த பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன.

இந்த தீ விபத்தினால் லயன் தொகுதியில் அமைந்திருந்த 24 வீடுகள் சேதமடைந்ததுடன் இந்த வீடுகளில் குடியிருந்த 19 குடும்பங்களை சேர்ந்த 108 பேர் தற்காலிகமாக போடைஸ் தமிழ் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகமும், நோர்வூட் பிரதேச சபையினரும், மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஊடாகவும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை என தெரிவிக்கும் அட்டன் பொலிஸார், அட்டன் பொலிஸ் கைரேகை அடையாளப் பிரிவு டன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர். (ஐ)

# வத்தளை விபத்தில் இரு பெண்கள் சாவு

கொழும்பு, டிசெ. 30

வத்தளை, ஹேகித்த சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மாணவி ஒருவரும் பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

நீர்கொழும்பு நோக்கிச் பயணித்த கொள்கலன் ஒன்று வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த இருவரும் ராகம வைத் தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த பெண் 21 வயதுடையவர் எனவும், உயிரிழந்த மாணவி 12 வயதுடையவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பில் கொள்கலன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாரின் விசாரணைகள் தொடர்கின்றன. (ஐ)

# ஒவ்வொரு தொகுதிக்கும் அபிவிருத்திக்கு ரூ.30 கோடி

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தகவல்



கொழும்பு, டிசெ. 30

***அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு தொகுதிக்கும் தலா 30 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கு நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். அத்துடன் அமைச்சுகளின் நிதியொதுக்கீடுகளையும் சேர்ந்து இருக்கின்ற குறுகிய காலத்துக்குள் முடியுமான உச்சக்கட்ட அபிவிருத்திகளைச் செய்வோம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.***

சுகாதார இராஜாங்க அமைச்சராகபைசால்காசிம்பதவியேற்றத்தை வரவேற்கும் முகமாக நிந்தவூரில் நடைபெற்ற மக்களின் எழுச்சி விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் கூறியதாவது;

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேசமானது பலதடவைகளாக தங்களது தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றப்பிரதிநிதித்துவத்தைதக்கவைத்துக் கொண்டிருக்கிறது. பொத்துவில் தேர்தல் தொகுதியில் ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் தேவைப்படுகின்ற ஒரு நிலையில், பைசல் காசிம் தனது பதவியை தக்கவைத்துக் கொண்டிருப்பதானது அவரது ஆளுமையைக் காட்டுகின்றது.

நாங்கள் ஆளும் கட்சியில் இருந்தாலும், எதிர்க்கட்சியில் இருந்தாலும் பைசல் காசிமின் செயற்பாடுகள் கட்சிக்குப் பாரிய பங்களிப்புச் செய்துள்ளன. அமைச்சர் என்றவகையில் தனது தொகுதிகளுக்கு அப்பால் பல மாவட்டங்களில் அதிகளவான அபிவிருத்திகளைச் செய்துள்ளார். அவரது பதவியேற்பு நிகழ்வுக்கு, நாடளாவிய ரீதியிலிருந்து நூற்றுக்கணக்கான கட்சி ஆதரவாளர்கள் வருகைதந்து அதற்குச் சான்று பகர்ந்தார்கள்.

வரலாற்றில் என்றுமில்லாவாறு கடந்த 3 வருடங்களுக்குள் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நிந்தவூரில் அமுல்படுத்தியிருக்கிறோம். அதற்குத்தடை போடுவதற்கு உள்ளூராட்சிச்சபை ஊடாகச் சில முயற்சிகள் நடந்தாலும், அதைப் பொருட்படுத்தாமல் எஞ்சியிருக்கின்ற ஒரு வருடத்துக்குள் முடியுமான இன்னும் பல அபிவிருத்தித்திட்டங்களைச் செய்துமுடிப்போம்.

ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர்கள் எல்லோரும் ஒன்றுகூடி பேசியபோது, ஒவ்வொரு தொகுதிக்கும் 30 கோடி ரூபாவை ஒதுக்குவதான தீர்மானத்தை நிதி அமைச்சர் அறிவித்தார். அதற்கு மேலதிகமாக அமைச்சுகளின் ஒதுக்கீடுகளையும் சேர்த்து, எஞ்சியிருக்கின்ற காலப்பகுதிக்குள் முக்கியமான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இந்த அபிவிருத்திகளை எல்லா ஊர்களுக்கும் சமமாக பகிர்ந்தளிக்கின்ற பணியை எங்களது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருமாகச் சேர்ந்து செய்வார்கள். என்றுமில்லாதவாறு பாரிய அபிவிருத்திப் புரட்சிகளைக் கரையோரப் பிரதேசங்களில் அமுல்படுத்துவதற்கான வாய்ப்பு இம்முறை எங்களுக்கு கிடைத்திருப்பதையிட்டுச் சந்தோசமடைகிறோம்.

அதேபோன்று, உரிமை சார்ந்த விடயங்களிலும் முஸ்லிம் காங்கிரஸ் தீவிரம் காட்டி வருகின்றது. தீர்க்கப்படாத பிரச்சினைகளை ஜனாதிபதி மட்டத்திலும், பிரதமர் மட்டத்திலும் எங்களது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருமாகச் சேர்ந்து பேசியிருக்கின்றோம். எஞ்சியிருக்கின்ற காலப்பகுதிக்குள் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண நாங்கள் அனைவரும் இன்னும் தீவிரமாக செயற்படவுள்ளோம்.

காணிகள் பறிபோன விவகாரத்தில் யாருமே செய்யாதளவுக்கு தீவிர முயற்சிகளில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். காணிப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள வனப் பரிபாலனத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், நில அளவைத் திணைக்களம் ஆகியவற்றின் உயரதிகாரிகளுடன் மாவட்ட அரச அதிபரையும் அழைத்துக்கொண்டு களவிஜயம் மேற்கொண்டு ஆய்வுகளை மேற்கொண்டோம்.

பின்னர் காணிப் பிரச்சினைகள் சம்பந்தமான அறிக்கையைத் தயாரித்து ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பும் வேலையை, எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எனது தலைமையில் கீழிருந்து செய்துமுடித்தார்கள். ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ இவ்விவகாரத்தைக் கையாள்வதில் விவகாரத்தில் அதிக கரிசணையுடன் செயற்பட்டார். தற்போது புதிய செயலாளர் வந்துள்ள நிலையில், இதற்கானதீர்வுவிடயத்தை நாங்கள் இன்னும் துரிதப்படுத்த வேண்டியுள்ளது.

இதுதவிர ஒலுவில் அஷ்ரப் நகர் படைமுகாம், பாலமுனை இராணுவ முகாம், அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற தீர்ப்பு தொடக்கம் நிர்வாக ரீதியிலானபிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வை பெற்றுக்கொடுப்பதில் நாங்கள் விடாப்பிடியாக இருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக்கு நாங்கள் இட்டிருக்கின்ற அரசியல் மூலதனத்தை அடிப்படையாக வைத்து இவற்றை நிவர்த்திக்கின்ற அழுத்தத்தைத் தொடர்ந்து பிரயோகித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கூடிய திணைக்களங்கள் ஜனாதிபதியின் கீழ் வரும் காரணத்தினால், அண்மையின் நடைபெற்ற அரசியல் கொந்தளிப்பின் தாக்கம் இவற்றில் பாதிப்பு செலுத்தாதவாறு நாங்கள் மிகவும் பக்குவமாக இவற்றைக் கையாண்டு வருகிறோம். ஏனைய அரசியல்வாதிகள் போன்று அறிக்கைகளோடு மாத்திரம் நின்றுவிவாமல், நிரந்தரத் தீர்வை நோக்கிய முன்னெடுப்புகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சரிவரச் செய்துகொண்டிருக்கிறது.

ஒலுவில் துறைமுகம் இப்போது பாரிய பிரச்சினையாக தலையெடுத்துள்ளது. இங்கு மணலை அகழ்வதற்காக தனிதொரு கப்பலைக் கொள்வனவு செய்து நிறுத்திவைப்பதற்கான அமைச்சரவை அனுமதியைப் பெற்றிருக்கிறோம். இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்கில் இங்குள்ள மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிசிரத்தையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இத்துறைமுகம் முழுமையாக மீன்பிடித் துறைமுகமாக மாற்றப்படுவதுடன், நுழைவாயிலை அடைத்துள்ள மணலை அகற்றி, அடிக்கடி மணல் அகழ்வதைத் தடுத்து, போடப்பட்டுள்ள தடுப்புக் கற்களை அகற்றுகின்றவிடயத்தில் நாங்கள் எடுத்துள்ள பொறுப்புகளை முழுமையாகச் சரிவர நிறைவேற்றிக் கொடுப்போம்–என்றார். (ஐ)

# இரணைமடுவில் பிடிபடும் மீன்களுக்கு நல்ல கிராக்கி!





*கிளிநொச்சி, டிசெ. 30*

*இரணைமடுக்குளத்தின்வான்கதவுகள்திறக்கப்பட்ட நிலையில்தண்ணீர் வான் பாயும் பகுதியில் பலர் மீன் பிடியில் ஈடுபட்டுள்ளனர்.*

*அதில் தினமும் நூற்றுக்கணக்கான கிலோ மீன்கள் பிடிபடுவதாகவும், அதனைக் குளத்தைப் பார்வையிட வரும் மக்கள் மற்றும் வியாபாரிகள் எனப்பலரும் கொள்வனவு செய்வதால் அந்த மீன்கள் ஆயிரக்கணக்கான விலைக்கு விற்கப்படுவதாகவும் அங்கு மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் தெரிவித்தனர்.* (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir





# வெற்றியை நோக்கி இந்தியா

இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியின், நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதற்கமைய 399 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா அணி, ஆட்டநேர முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 229 ஓட்டங்களை பெற்றுள்ளது. இதன்படி ஆஸ்திரேலியா அணி வெற்றிபெற வேண்டுமாயின் 170 ஓட்டங்கள் பெற வேண்டியுள்ளது.

ஆட்டநேர முடிவில் பெட் கம்மின்ஸ் 40 ஓட்டங்களுடனும், நதன் லியோன் 1 ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர். மெல்போர்ன் மைதானத்தில் கடந்த 26ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய இந்திய அணி முதல் இன்னிங்ஸிற்காக 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 443 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக புஜாரா 106 ஓட்டங்களையும், விராட் கோஹ்லி 82 ஓட்டங்களையும், ரோஹித் சர்மா ஆட்டமிழக்காது 63 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் பெட் கம்மின்ஸ் 3 விக்கெட்டுகளையும், மிட்செல் ஸ்டாக் 2 விக்கெட்டுகளையும், ஜோஸ் ஹசில்வுட் மற்றும் நதன் லியோன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய ஆஸ்திரேலியா அணி, 151 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக டிம் பெய்ன் மற்றும் மார்க்கஸ் ஹரிஸ் ஆகியோர் தலா 22 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் பும்ரா 6 விக்கெட்டுகளையும், ஜடேஜா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இந்தியா, 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 106 ஓட்டங்களை பெற்றிருந்த போது தனது ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. இதற்கமைய ஆஸ்திரேலியா அணிக்கு 399 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்போது இந்தியா அணி சார்பில், மயங்க் அகர்வால் அணியின் அதிகபட்ச ஓட்டமாக 42 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் பெட் கம்மின்ஸ் 6 விக்கெட்டுகளையும், ஜோஷ் ஹசில்வுட் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதற்கமைய 399 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி, களமிறங்கியுள்ள ஆஸ்திரேலியா அணி ஆட்டநேர முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 229 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இன்னமும் 2 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், ஆஸ்திரேலியா அணி, 170 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி இன்று போட்டியின் இறுதி நாளை எதிர் கொள்ளவுள்ளது.

# மெத்தியூ வாட்டின் அதிரடியால் ஹோபார்ட் ஹரிகேன்ஸ் வெற்றி

பிக்பஷ் ரி-20 தொடரின் 11ஆவது லீக் போட்டியில், ஹோபார்ட் ஹரிகேன்ஸ் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.


ஹோபார்ட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், ஹோபார்ட் ஹரிகேன்ஸ் அணியும், சிட்னி தண்டர் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஹோபார்ட் ஹரிகேன்ஸ் அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய சிட்னி தண்டர் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 193 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக ஜோஸ் பட்லர், 89 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் ஜேம்ஸ் போக்னர் மற்றும் ரோஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 194 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஹோபார்ட் ஹரிகேன்ஸ் அணி, அணியின் தலைவரான மெத்தியூ வாட்டின் அதிரடியின்



துணையுடன் 19.1 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால் 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்ற ஹோபார்ட் ஹரிகேன்ஸ் அணி, நடப்பு தொடரில் ஹெட்ரிக் வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக மெத்தியூ வாட் 85 ஓட்டங்களையும், டி ஆர்சி ஷோர்ட் 58 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் சேம் ரெய்ன்பெர்ட் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 85 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட மெத்தியூ வாட் தெரிவுசெய்யப்பட்டார்.





# களத்தில் நிலைத்து நிற்கும் இலங்கை

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின், நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதன்படி, 660 என்ற வெற்றி இலக்கை நோக்கி, இரண்டாவது இன்னிங்சை தொடங்கியுள்ள இலங்கை அணி, ஆட்டநேர முடிவில், 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 231 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஆட்டநேர முடிவில் சுரங்க லக்மால் 16 ஓட்டங்களுடனும், தில்ருவான் பெரேரா 22 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

கிறிஸ்ட்சேர்ச்சில் கடந்த 26ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி களமிறங்கிய நியூசிலாந்து அணி, இலங்கை வேகப்பந்து வீச்சாளர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 50 ஓவர்களிலேயே 178 ஓட்டங்களுக்கு சுருண்டது.

அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்க தவற, அதன்பிறகு களமிறங்கிய வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்கு நடையை கட்டினர். எனினும் விக்கெட் காப்பாளர் வட்லிங்கின் 46 ஓட்டங்களுடனும், வேகப்பந்து வீச்சாளர் டிம் சவுத்தியின் 68 ஓட்டங்களுடனும் சற்று வலுப்பெற்ற நியூசிலாந்து அணி, இறுதியில் 178 ஓட்டங்களுக்கு மடிந்தது.

இதன்போது, பந்து வீச்சில் வேகப்பந்து வீச்சாளர் சுரங்க லக்மால் 5 விக்கெட்டுகளையும், லஹிரு குமார 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணி, 104 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் இறுதிவரை களத்தில் இருந்த அஞ்சலோ மத்தியூஸ் மட்டும், ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டமாக்க பெற்றுக்கொண்டார்.

இதன்போது நியூசிலாந்து அணி சார்பில், வெறும் 15 பந்துகளை வீசிய டிரென்ட் போல்ட், 4 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். டிம் சவுத்தி 3 விக்கெட்டுகளை சாய்த்தார்.

74 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து அணி, நேற்று 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 585 ஓட்டங்களைப் பெற்றபோது, தனது ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. இதனால் இலங்கை அணிக்கு 660 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

நியூசிலாந்து அணி சார்பில், ஜீட் ராவல் 74 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற, அதன் பிறகு களமிறங்கிய கேன் வில்லியம்சன் 48 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தார். மேலும், டொம் லதம் 176 ஓட்டங்களையும், ரோஸ் டெய்லர் 40 ஓட்டங்களையும், பெற்று ஆட்டமிழந்தனர்.

ஹென்றி நிக்கோல்ஸ் 162 ஓட்டங்களுடனும், கிராண்ட்ஹோம் 71 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இலங்கை அணியின் பந்து வீச்சு சார்பில், லஹிரு குமார 2 விக்கெட்டுகளையும், தில்ருவான் பெரேரா மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இன்னமும் 4 விக்கெட்டுகள் மீதமுள்ள நிலையில், 429 எடுத்தால் வெற்றி என்ற ஓட்டங்களை நோக்கி இலங்கை அணி, இன்று போட்டியின் இறுதிநாளை தொடங்கவுள்ளது. (ஐ)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னதாக ஐக்கிய தேசிய கட்சியும், ஜே.வி.பியும் மற்றும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் இணைந்த புதிய அரசமைப்புக்கான ஒரு வரைவை வெளியிடுவோம் எனவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது வீட்டில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த நவம்பர் 7ஆம் திகதி வரவிருந்த அரசமைப்பு வரைவைத் தடுப்பதற்காகவே மஹிந்தவைப் பிரதமராக நியமித்து குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளார் ஜனாதிபதி.

19ஆவது திருத்தத்தில் இருந்த தமது அதிகாரங்கள் பறிக்கப்பட்டதை அறியாதவர் போன்று இந்த நடவடிக்கைகளை செய்திருந்தார்.

19ஆவது திருத்தத்தில் அகற்றப்பட்ட நிறைவேற்று அதிகாரங்களை இன்னும் தன்னுடன் இருப்பது போன்று ஜனாதிபதி செயற்பட்டு இந்தத் தீர்மானங்களை எடுத்துள்ளார்.

இந்த செயற்பாட்டின்போது தான்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு முன்நின்று செயற்பட்டது. இந்தச் செயற்பாட்டிற்குத்தான் நாட்டில் பெரும் வரவேற்பு இருக்கின்றது. ஆனால், இதில் சில விமர்சனங்களும் இருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்க நீதிமன்றம் சென்றதாக ஒரு விமர்சனமும் உள்ளது.

நாட்டில் ஜனநாயகம் வீழ்ச்சி அடைகின்றதாக அல்லது சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைகின்றதாக இருந்தால், மிகவும் பாதிக்கப்படுவது தமிழ் மக்கள். ஆகையினால், சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைவதை ஏற்க முடியாது. அதைத்தடுத்துநிறுத்தவேண்டும்.

தமிழர்களாகச்சுயநலத்துடன் சிந்தித்திருந்தால் கூட நாங்கள் அதைச் செய்திருக்கவேண்டும். அரசமைப்புமீறப்படுகின்றபோது, அதை மீறப்படாமல் தடுக்கின்ற உரிமைதமிழ்மக்களுக்குத்தான் உள்ளது.

ஏனெனில், ஓர் அரசியல் தீர்வை நாம் எதிர்நோக்குவது, அரசமைப்பின் மூலமான ஒரு தீர்வு. புதிய அரசமைப்புமூலமாக அல்லது அரசமைப்பு மறுசீரமைப்பு மூலமாக எழுதப்படும் தீர்வையே நாம் எதிர்பார்த்திருக்கின்றோம்.

அவ்வாறு எழுதப்பட்ட பின்னர் அரசமைப்பு மீறப்படுமாக இருந்தால், அந்த தீர்வில் ஒரு பிரயோசனமும் இல்லாமல் போய் விடும்.

தற்போதுள்ள சூழ்நிலையில், ஜனாதிபதி கலைக்கமுடியாதென இருக்கின்றபோது, அவர் நாடாளுமன்றத்தைக் கலைத்தார். பிரதமரை மாற்ற முடியாதென எழுதப்பட்டபோது, பிரதமரை மாற்றினார். அது நேரடியாகவே அரசமைப்பை பிரயோசனமற்றதாக ஆக்கும் செயற்பாடுகள்.

அரசமைப்பைப் பேணி அதன்படி, அனைவரும் ஒழுக வேண்டுமென்பதை இன்று தடுக்காவிடின், தீர்வு வந்தபின்னரும் அவர்கள் அதை மீறுவார்கள். அப்போது நாங்கள் ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்படும்.

இந்தநிலையில் தான் அரசமைப்பை மீறிச் செய்யும் செயற்பாட்டை தட்டிக் கேட்டோம். அதில் வெற்றியும் கண்டோம். இதனால் ஏற்பட்ட விளைவுகள் மிக மிக முக்கியமானவை.

நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளது. மஹிந்த ஆட்சிக்கு வந்தவுடன் நாட்டில் அடக்குமுறை ஒடுக்குமுறைகள் காணப்பட்டன. தற்போது மக்கள் நிம்மதியாக வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

மூன்று வருடகாலமாகதமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது என சொல்லிக் கொண்டிருந்த பலருக்கு மஹிந்த பிரதமர்ஆசனத்துக்கு வந்தவுடனேயே தெளிவு வந்துவிட்டது.

இந்தத் தீங்கு மீண்டும் எம் மத்தியில் வராதாவாறு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம் என தமிழ் மக்களுக்கு நன்றாக தெரிந்திருக்கின்றது.

தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில், நாட்டில் ஜனநாயகத்தைப் பேணுவதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டுள்ளதென்ற நல்ல எண்ணம் உதித்துள்ளது.

இது புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியில் மிகப் பெரிய பங்கை வகிக்கும். நாட்டைப் பிரிக்க முயலவில்லை. நாட்டுக்குக் கேடு விளைவிக்க விரும்பவில்லை. அதை தடுத்து நிறுத்தியிருக்கின்றோம்.

சிறிய எண்ணிக்கையிலானவர்களாக நாங்கள் இருந்தாலும் கூட, நாட்டுக்காகப் பாரிய பங்களிப்பை தமிழ் மக்கள் செய்திருக்கின்றார்கள்.

புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகளிலே சிங்கள மக்கள் மத்தியில் உள்ள சந்தேகங்கள் விலகுவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

ஆகையினால், மிகத் துரிதமாக புதிய அரசமைப்பு உருவாக்கும் பணிகளில் நாங்கள் ஈடுபடுகின்றோம்.

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னதாக ஐக்கிய தேசிய கட்சியும், ஜே.வி.பியும் மற்றும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் இணைந்த புதிய அரசமைப்புக்கான ஒரு வரைவை வெளியிடுவோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கும் முயற்சி மக்கள் மத்தியில் கொண்டு வரப்படும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை நிரூபிக்க முழு மூச்சுடன் செயற்பட்டு, மூன்றில் இரண்டு பெரும்பான்மை நிரூபிக்கப்பட்டுசர்வசன வாக்கெடுப்புக்குப் போகும் போது, ஏற்கனவே, குறிப்பிட்ட நல்லெண்ணம், மிகப்பாரிய பங்கு வகிக்கும்.

எதிர்வரும் வருடத்தில் புதிய அரசமைப்பை உருவாக்கும் மிகப் பாரிய சந்தர்ப்பம் எழுந்துள்ளது. தற்போது எழுந்த குழப்பத்தில் அது புத்துயிர் பெற்றுள்ளது – என்றார். (ஐ-07)

## வெள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடந்துள்ளது.

கிளிநொச்சி, ஆனந்தபுரம் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த செல்வவினோதரன் அன்புரதன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

இந்தச் சிறுவன் அவரது அம்மம்மாவின் வீட்டுக்குச் சென்று அங்கு நண்பர்களுடன் விளையாடிக்கொண்டிருந்துள்ளார்.

இதன்போது அந்தப் பகுதியில் வெள்ளத்தால் நிறைந்திருந்த வாய்க்கால் ஒன்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் சடலம் கிளிநொச்சி வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளைக்கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

அத்துடன், பிரதமர்ரணில்விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஆகியோரின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி முன்னேற்றமடையும் எனவும் அவர் கூறியுள்ளார்.

விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்–

அரசியல் நெருக்கடியில் ஐக்கிய தேசியக் கட்சியினர் பணத்துக்கும், முறையற்ற அரசின் பதவிக்கும் விலை போகவில்லை. அனைவரும் ஒன்றிணைந்தே நீதித்துறையின் ஊடாக ஜனநாயகத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சி புதிய விடயங்களை வரவேற்கின்றது. 2020ஆம் ஆண்டுக்கு பிறகுஅரசியல்ரீதியில்நிலையான மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும்.

நாட்டுத் தலைவராக இனி ஐக்கிய தேசியக் கட்சியினரே தெரிவு செய்யப்படுவர். அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கிப் பலருக்குப் பல விடயங்களை தெளிவுபடுதுவோம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தில் ஐக்கிய தேசியக் கட்சியேமாறுபட்ட ஒருஅரசைமுன்னெடுத்துச் செல்லும் – என்றார்.

## கூட்டமைப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினரால்வெளியிடப்பட்டுள்ள கருத்தை கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மறுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவிததார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டமைப்பின் நான் உட்பட மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குஇரட்டைக்குடியுரிமை உள்ளது எனவும் அது தொடர்பில் உயர்நீதிமன்றத்தை நாடி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவியை இல்லாமலாக்குவோம் எனவும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

அவ்வாறான இரட்டைக் குடியுரிமை எனக்கு மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எவருக்கும் இல்லை என்பதை உறுதிப்படுத்த விரும்புகின்றேன். அண்மைக்காலமாக எனது நடவடிக்கையால் மிகவும் நொந்துபோயுள்ள மஹிந்த அணியினர் என் மீது சேறுபூசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இன்று தென்னிலங்கை கடும்போக்கு அரசியல்வாதிகளால் அதிகம் விமர்சிக்கப்படுபவனாக நான் உள்ளேன். இதனால்தான் இவ்வாறான பொய்யான பரப்புரைகளை என் மீதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதும் மேற்கொண்டு வருகின்றனர் என்பதை – என்றார். (ஐ-07)

## மேற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம குற்றம்சாட்டியுள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்–

நாட்டில் ஜனாதிபதியை வைத்திருப்பதா? இல்லையா? அடுத்த பிரதமர் யார் இதுபோன்ற விடயங்களில் தீர்வுகளை ஐரோப்பிய நாடுகளே எடுக்கின்றன.

இந்த மேற்கத்தேய நாடுகளின் உதவியுனே வடக்கு – கிழக்கில் யுத்தம் நிலவியது. இன்று வடக்கு – கிழக்கில் உள்ள அரசியல்வாதிகள் வாயை திறந்தால் இராணுவ முகாம்களை மூடுமாறே கோருகின்றனர்.

ஆனால் மக்கள் இராணுவத்தை நீக்குமாறு கோரவில்லை. இன்று வடக்கில் ஏற்பட்டுள்ள அசாதாரண வானிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவத்தினரே உதவுகின்றனர்.

இதற்கு இராணுவத்திலுள்ள பெரும்பாலானவர்கள் பௌத்தர்களாக இருப்பதே காரணம். இந்த நாடு சிங்கள, பௌத்த நாடு என்பதே எனது நிலைப்பாடு. ஆகவே எந்தவொரு காரணத்திற்காகவும் நாட்டைப்பிரிக்க சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது – என்றார். (ஐ)

## ஒற்றையாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன் தினம் கண்டிக்குச் சென்ற ரணில் மகாநாயக்க தேரர்களிடம் பேசிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார்.

பௌத்ததுக்கு வழங்கப்படும் முன்னுரிமை ஒருபோதும் மாற்றியமைக்கப்படாது எனவும், ஒற்றையாட்சி முறைமை நீடிக்கும் எனவும் தான் மகாநாயக்கர்களிடம் உறுதியளித்தார் எனப் பிரதமர் அங்கு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் நேற்று சுமந்திரனிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர்–

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு எல்லோரும் இணங்கியிருக்கிறார்கள் எனச் சொன்னார் என்று செய்திகள் வெளிவந்துள்ளன. அது இடைக்கால அறிக்கையிலும் உள்ளது. பௌத்தத்துக்கு முதலிடம் என்று சொல்லப்படுவதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அப்படி சொல்லப்படுவதால் மற்றச் சமயத்தவரோ அல்லது சமயம் இல்லாதவரோ எந்தவிதத்திலும் குறைந்தவர்களாக நடத்தப்பட முடியாது. அனைவரும் சமமானவர்களாக நடத்தப்படவேண்டும். அனைத்தச் சமயங்களும் சமமாகப் பேணப்படவேண்டும் என்ற வாக்கியங்களும் உள்ளடக்கப்படவேண்டுமென்று அந்த இடைக்காலவரைவில் இருக்கிறது.

இதில் இரண்டாவது விடயம் – ஒற்றையாட்சி முறையில் தான் புதிய அரசமைப்பு வருமென்று ரணில் விக்கிரமசிங்க சொன்னார் எனத் தமிழ் ஊடகங்கள் செய்தி பிரசுரித்திருக்கின்றன. நான் தமிழ் ஊடகங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். அதாவது மகாநாயக்க தேரர்களோடு ரணில் விக்கிரமசிங்க பேசும்போது தமிழிலா பேசினார். ஒற்றையாட்சி என்று தமிழிலா சொன்னார். அவர் ஏக்கிய இராஜ்ஜிய என்று தான் சொல்லியிருப்பார்.

ஏக்கிய இராஜ்ஜிய என்றால் என்னவென்று இடைக்கால அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏக்கிய இராஜ்ஜியவுக்குச் சரியான தமிழ்ச் சொல் ஒற்றையாட்சி இல்லை என்று இடைக்கால அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அதற்குரிய சரியான தமிழ்ச் சொல் ஒருமித்த நாடு என்றும் இடைக்கால அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

அப்பிடிருக்க இன்றும் ஊடகங்கள் ஏக்கிய இராஜ்ஜிய என்றால் ஒற்றையாட்சி என்று தான் எழுதுகின்றன. இதைப்பற்றி நான் பல நூறு தடவைகள் சொல்லியுள்ளேன். எப்படிச் சொன்னாலும் வேண்டுமென்றே ஊடகங்கள் ஒற்றையாட்சி என்று எழுதிக்கொண்டிருக்கின்றன – என்றார்.

தெற்கில் உள்ளவர்கள் ஒற்றையாட்சி என்று கூறுகின்றனரே என ஊடகவியலாளர்கள் அவரிடம் கேட்டபோது,

தெற்கில் உள்ள ஒருவரும் ஒற்றையாட்சி என்று சொல்வதில்லை. அவர்களுக்குத் தமிழ் தெரியாது. அவர்கள் ஏக்கிய இராஜ்ஜிய என்று தான் சொல்கின்றார்கள். தீர்வு எந்த அடிப்படையிலானது என்று இடைக்கால அறிக்கையை வாசித்துப் பாருங்கள்.

அந்த அறிக்கையில் ஏக்கிய இராஜ்ஜிய என்றால் ஒருமித்த நாடு என்றும் ஏக்கிய இராஜ்ஜிய என்று சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல் ஒற்றையாட்சி அல்ல – ஒருமித்த நாடு என்று தான் சொல்லப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல ஒருமித்த நாடு என்றால் அதற்குச் சரியான வரைவிலக்கணமும் சொல்லப்பட்டுள்ளது.

எல்லாக் கட்சிகளும் இணங்கி எழுதப்பட்ட முதல் பக்க அறிக்கையிலையே இது தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அதாவது ஏக்கிய இராஜ்ஜியவுக்குச் சரியான தமிழ்ச் சொல் ஒற்றையாட்சி அல்ல. சரியான தமிழ்ச் சொல் ஒருமித்த நாடு என்று.

அது மட்டுமல்லமால் ஒருமித்த நாட்டுக்கு வரைவிலக்கணமும் எழுதப்பட்டுள்ளது. அத பிரிக்கப்படாத – பிரிக்க முடியாத ஒரு நாடு என்று அர்த்தப்படுமென்று எழுதப்பட்டுள்ளது. புதிய அரசமைப்புக்கான விளக்கம் அதில் தான் உள்ளது. வேறு எங்கும் இல்லை. நித்திரையால் எழும்பி ஏக்கிய இராஜ்ஜிய என்றால் ஒற்றையாட்சி என்று சொன்னால் அதற்கு நாங்கள் பதில் சொல்ல முடியாது. அதற்குரிய ஆவணத்தில் இருப்பதைத் தான் நாங்கள் உபயோகிக்கவேண்டும் – என்றார். (ஐ-07)

## ஜனநாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, அண்மையில் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே. சயந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளுடனான 'டீலில்' உருவானது எனக் கருத்து தெரிவித்தமை தொடர்பில் கேட்டபோதே சுமந்திரன் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவானபோது நான் அதில் இருக்கவில்லை. அதனால் எந்த விதமான டீல் நடந்தது என்றோ, அல்லது டீல் நடந்ததா என்பது பற்றி எனக்குத் தனிப்பட்ட அறிவு கிடையாது. ஆனாலும் பொதுவாக எல்லோருக்கும் தெரிந்த உண்மை இருக்கின்றது.

அது என்னவெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்துக்கு முன்னர் தமிழ் அரசியல் கட்சிகள் ஜனநாயக அரசியலை முன்னெடுப்பதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தடை விதித்திருந்தனர்.

அதனை மீறி ஜனநாயக அரசியலில் ஈடுபட்டவர்கள் அதனை மீறியமைக்காகப் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்துக்குப் பின்னரே தமிழ் அரசியல் கட்சிகள் அரசியலை முன்னெடுக்க விடுதலைப்புலிகள் இணங்கினார்கள். விடுதலைப்புலிகள் பேச்சுக்களுக்கு வரும்போது அதன் இடைநடுவில் செயற்பட்ட நோர்வே போன்ற நாடுகள் அவர்களுக்கும் ஜனநாயக சக்தி இருப்பது அவசியம் என வலியுறுத்தி இருந்தன.

அவ்வாறு இருந்தாலே சர்வதேச நாடுகளுடன் பேச முடியும், இலங்கை அரசுடன் பேசிச் சில இணக்கப்பாடுகளை ஏற்படுத்த முடியும் என்ற ஆலோசனைகளை விடுதலைப் புலிகளுக்குப் பல நாடுகள் கொடுத்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்தின்போது ஜனநாயக ரீதியில் அரசியலை முன்னெடுத்தவர்களினதும், புலிகளினதும் தேவைப்பாடுகளும் சந்தித்தன. அதனாலையே ஜனநாயக ரீயில் அரசியல்செய்வதற்கான அனுமதி விடுதலைப் புலிகளால் கொடுக்கப்பட்டது – என்றார். (ஐ-07)

# இரணைமடு நீர் வழங்கல் திட்டத்தை புரிந்துணர்வுடன் முன்னெடுப்போம்



## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 30

விவசாயிகள் மத்தியிலுள்ள தப்பபிப்பிராயங்களைக் களைந்து, புரிந்துணர்வு அடிப்படையில் இரணைமடு நீர் வழங்கல் திட்டத்தை உடனடியாக முன்னெடுக்கவேண்டும். சகல வேலைகளும் முடிவுறும் தருவாயில், அதிக செலவிலான இந்தத் திட்டத்தைக் கைவிடமுடியாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சரான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரிகளுக்கும், நீர்ப்பாசன திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும் இடையில் நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்ற சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நீர்ப்பாசன அமைச்சுடன் பேச்சு நடத்தி ஒருமித்துச் செயற்படுவது குறித்து நாங்கள் இணக்கப்பாடுகளைக் கண்டிருக்கிறோம். விவசாயிகளுக்கும், குடிதண்ணீர்ப் பாவனையாளர்களுக்கும் இடையிலுள்ள பிரச்சினை வடக்கு மாகாணத்தில் தான் உச்சத்தில் இருக்கிறது. இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நீரைக் கொண்டுசெல்வது இப்போது பிரதேசவாதப் பிரச்சினையாக பார்க்கப்படுகிறது.

இப்பிரச்சினைக்கான மாற்றுத்திட்டங்களை நாங்கள் ஏற்கனவே நடைமுறைப்படுத்த ஆரம்பித்துவிட்டோம். இரணைமடுக் குளத்தின் கொள்ளளவை அதிகரிப்பதற்காக 20 மில்லியன் டொலர்களை செலவிடுவதற்குத் தயாரகவுள்ளோம். இந்நிலையில், வெள்ளப்பெருக்கின் பின்னாலும் யாழ். மக்களுக்குப் பதில் சொல்வது எங்களுக்கு கஷ்டமாக உள்ளது. புரிந்துணர்வு அடிப்படையில்தான் இதற்கு தீர்வு காணப்பட வேண்டும்.

நீர்க்கட்டணங்களை அதிகரிக்க முடியாமையால், வறட்சி காலங்களில் மாத்திரம் குடிதண்ணீரை வழங்குவதற்கு இந்தத் திட்டத்தை பயன்படுத்தத் தீர்மானித்துள்ளோம். 250 மில்லியன் டொலர் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தத் திட்டத்தின், விநியோக வேலைகள் அனைத்தும் முடிவுறும் தறுவாயில் உள்ளன. ஆனால், இரணைமடுக் குளத்திலிருந்து நீரைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் பிரச்சினையால் இந்தத்திட்டம் இடைநடுவில் நின்றுகொண்டிருக்கிறது.

அரசியல்வாதிகள் சிலர் இரணைமடு விவகாரத்தைக் கையில் எடுத்துள்ள நிலையில், விவசாய மக்கள் மத்தியில் இந்தத் திட்டம் பற்றிய தப்பபிப்பிராயங்களைக் களையவேண்டும். தண்ணீரை பகிர்ந்துகொள்வதால் விவசாயத்துக்குப் பாரிய பிரச்சினைகள் ஏற்படாது என்பதை அவர்கள் உணரவேண்டும். பாரிய செலவில் அமுல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தை இடைநடுவில் கைவிட முடியாது.

இந்த இழுபறியினால் நிதி வழங்கும் நிறுவனங்கள் தங்களது முதலீடுகளை முடக்கிவிடும் அபாயம் உள்ளது. இருக்கின்ற குறுகிய காலத்துக்குள்ளாவது இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு யாழ். மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படவேண்டும். இத்திட்டம் நடைமுறைக்கு வந்தால், கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கின்ற குழாய்மூலம் நீர் விநியோகம் 3.5 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக அதிகரிக்கும் – என்றார்.

இந்தச் சந்திப்பில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின், வடபிராந்திய பிரதி பொது முகாமையாளர் ரி. பாரதிதாசன், உதவி பொது முகாமையாளர் கே. வாசுதேவன், மாவட்டப் பொறியியலாளர் என். நவரூபன் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தொழில்நுட்ப பிரதிப் பொதுச் செயலாளர் எஸ். சண்முகநாதன், பிரதி முகாமையாளர் என். சுதாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்பின்னர் அமைச்சர் இரணைமடுக் குளத்தையும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் நேரில் சென்று பார்வையிட்டார். அத்துடன் அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அனர்த்த நிவாரண செயலணி வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிணறுகள் உள்ளிட்ட நீர் மூலங்களை சுத்தப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. (ஐ)

## திருமலை விபத்தில் மூவர் காயம்

திருமலை, டிசெ. 30

திருகோணமலை – கந்தளாய் சந்தைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

வான் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியில் பயணித்த மூவர் மீது மோதியதாலேயே நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கந்தளாய் பகுதியைச் சேர்ந்தவர்களே இந்த விபத்தில் காயமடைந்துள்ளனர் எனவும், காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்பட்டது. (ஐ)

## லிப்ட் உடைந்து இளைஞர் சாவு

கொழும்பு, டிசெ. 30

கொழும்பு – கொம்பனித் தெரு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள களியாட்ட விடுதியின் லிப்ட் உடைந்து விழுந்தத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம், நேற்று அதிகாலை 1.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் பத்தரமுல்ல, தலங்கம பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதான கோகில சமந்த பெரும எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில், மேலும் இருவர் காயமடைந்த நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொம்பனித் தெரு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சப்ரகமுவ ஆளுநர் தலைமையில் கிளிநொச்சியில் நிவாரணப் பணி



வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே ஒன்பது மாகாண ஆளுநர்களிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக நேற்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் நிலுக்கா ஏக்கநாயக்க தலைமையில் நிவாரணப் கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருள்கள் வழங்கப்பட்டன.

கிளிநாச்சி பன்னங்கண்டி பாடசாலையில் நேற்று முற்பகல் இந்த நிவாரணப் பொருட்களை இரு மாகாண ஆளுநர்களும் இணைந்து வழங்கினர்.

இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 30

சுற்றுலா விஸாவில் வெளிநாடுகளுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொது முகாமையாளர் கீர்த்தி முத்துக்குமாரண இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

சுற்றுலா விஸாவில் வெளிநாடுகளுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனால் தொழில்களிலும், வெளிநாடுகளில் இடம்பெறுகின்ற எதிர்பாராத அசம்பாவிதங்களின்போதிலும் அவர்களின் பாதுகாப்பு குறித்து பிரச்சினை ஏற்படுகின்றது.

கட்டார், டுபாய் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கே சுற்றுலா விஸாவில் அதிக எண்ணிக்கையானோர் செல்வது தெரியவந்துள்ளது. அதேவேளை சில தரகர்களின் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கும் அதிகமானவர்கள் பயணங்களை மேற்கொள்வது கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தப் பயணங்களை மேற்கொள்வதற்காக உதவி புரிகின்ற முகவர் நிறுவனங்களைச் சுற்றிவளைக்கும் நடவடிக்கைளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன – என்றார். (ஐ)

## 35,000 ஆசிரியர் வெற்றிடங்கள் நாடளாவிய ரீதியில் உள்ளன

நாடளாவிய ரீதியில் சுமார் 35,000 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் எம். எம். ரத்னாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

விஞ்ஞானம், கணிதம், உள்ளிட்ட பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கே, இவ்வாறு வெற்றிடம் நிலவுகின்றது.

ஆங்கிலம் உள்ளிட்ட சில பாடங்களுக்கு மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளபோதிலும், சில பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றது.

இதனால், மேலதிகமாக உள்ள ஆசிரியர்களை, ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவும் பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் வெற்றிடம் நிலவும் பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது – என்றார்.

## மகன்மாரின் சண்டையைச் சமரசம் செய்யச் சென்ற தந்தை படுகொலை!

சகோதரர்களுக்கு இடையே சாவி மற்றும் பூச்சாடி தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தைத் தீர்க்க முயற்சித்த சம்பவத்தில் தந்தை கொல்லப்பட்டுள்ளார்.

ஹிங்குராங்கொட, கவுடுல்ல, கொலனிய பிரதேசத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இடையே இந்த வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. கொலை செய்யப்பட்ட நபர் 66 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் 40 வயதான மகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த அசம்பாவிதத்தால் கொலை செய்யப்பட்டவரின் குடும்ப அங்கத்தவர்கள் மூவர் ஹிங்குராக்கொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஹிங்குராக்கொட பொலிஸார் இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட நபர் ஹிங்குராங் கொட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.